உங்கள் இல்லங்களில் நிகழும் மங்கள நிகழ்வுகளின் நவீன முறையில் வீடியோ படப்பிடிப்பிற்கு
எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

வீடியோ கமரா, T. V. வீடியோ டெக் ஆகியவற்றை உத்தரவாதத்துடன் உடனுக்குடன் திருத்திக் கொள்வதற்கு
எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 04 புதன்கிழமை (16 – 02 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 81

# இலங்கையில் சமாதானம் ஏற்பட ஆஸி. அழுத்தம் கொடுக்க வேண்டும்

## அந்நாட்டு அரசாங்கத்துக்கு மத அமைப்புகள் வற்புறுத்தல்

கொழும்பு, பெப்ரவரி 16

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தப் பிரயோகிக்கப்படும் அழுத்தத்தை ஆஸ்திரேலிய அரசாங்கம் அதிகரிக்க வேண்டும்.

— அந்நாட்டு மத அமைப்புகள் இவ்வாறு வலியுறுத்திக் கேட்டிருக்கின்றன.

இது தொடர்பாக ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் கரேத் ஈவான்ஸுக்கு அந்த நாட்டின் மத அமைப்புகள் பல கடிதங்கள் அனுப்பியுள்ளன.

கத்தோலிக்க நிவாரண அமைப்பு ஒன்று இது தொடர்பாக எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உலகில் ஏனைய பகுதிகளில் நடந்து வரும் யுத்தங்கள் காரணமாக இலங்கையில் இடம்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வலி. வடக்கு பகுதியில் நேற்று ஹெலி, விமானத் தாக்குதல்!

ஸ்ரீலங்கா விமானப்படையின் சியாமா செட்டி குண்டுவீச்சு விமானங்கள் நேற்றுக் காலை 8-15 மணியளவில் கட்டுவன், ஏழாலைப் பகுதியில் குண்டுவீச்சு தாக்குதலை நடத்தின.

ஐந்து குண்டுகள் வரை வீசப்பட்டன. இதனால் அப்பகுதியில் பல வீடுகள் சேதமுற்றிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

ஹெலி ஒன்றும் அப்பகுதியில் நேற்றுக் காலை 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

பலாலி முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன.

இதேவேளை — காரைநகர் இராணுவ முகாமிலிருந்தும் பொன்னாலைப் பகுதியை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

பொன்னாலைச் சந்தி, குடியேற்றப் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

(உ-த-3-15-45)

## கிழக்கின் பின் வடக்கிலும் தேர்தல் நடத்துவாராம் டி.பி.!

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்ட பின்னர் வடக்கிலும் தேர்தல் நடத்தத்தான் யோசித்திருப்பதாக ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவித்தார்.

கட்டுகஸ்தோட்டையில் நடந்த மாகாண ஐ. தே. க. மாநாட்டில் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்ததாக அறிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு அக்டோபர் இறுதியில் அல்லது நவம்பர் முற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தத் தாம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாடாளுமன்ற மூலம் ஜனாதிபதி தெரிவு செய்யும் திட்டத்துக்கு முதலில் ஆதரவு தெரிவித்த எதிர்க்கட்சிகள் இப்போது பின்வாங்கியுள்ளன. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் உள்ள சில எம்.பிக்களின் ஆதரவுடன் இத்திட்டத்தை நிறைவேற்றலாம் என்று அநுரா பண்டாரநாயக்கா கருதுகின்றார்.

—இப்படி ஜனாதிபதி தெரிவித்தார். (உ-எ)

## இனப்பிரச்சினை இல்லை என டி. பி. கூறுவதை ஏற்க முடியாது!

### உலக திருச்சபைக் கவுன்ஸில் அறிவிப்பு

கொழும்பு, பெப். 16

இலங்கையில் பயங்கரவாதப் பிரச்சினைதான் உண்டு; இனப்பிரச்சினை அல்ல என்று ஜனாதிபதி விஜேதுங்கா கூறியுள்ளதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று உலக திருச்சபைகள் கவுன்ஸில் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இதனை இக் கவுன்ஸில் தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழர்கள் தொடர்பான பிரச்சினையை அமைதியான, பேச்சுவார்த்தை மூலமான தீர்வு ஒன்றை காணுவதன் மூலமே தீர்க்க முடியும் என்றும் —

வேறு வழிகள் மூலம் இதனை முன்னெடுத்துச் செல்லமுடியாது என்றும் —

உலக திருச்சபைகள் கவுன்ஸில் தொடர்ச்சியாகக் கூறி வந்திருக்கிறது.

இந்தப் பிரச்சினையில் இன ரீதியான தனித் தன்மையை வெளிப்படுத்தல், கலாசார வெளிப்பாடு மற்றும் அரசியல் சுதந்திரம் சம்பந்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. ஆகவே இப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமாக அல்லாது நீண்டகாலத் தீர்வு ஒன்றை உறுதிப்படுத்துவது சாத்தியமான காரியமல்ல.

கடந்த காலத்தில் போன்று, இந்தப் பிரச்சினைக்கு அவசர, அத்தியாவசிய சமாதான நடைமுறையை மேற்கொள்வதற்கு தேவையான நல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு தேர்தல்களை ஒட்டி கொழும்பில் தமிழர்கள் கைது

கொழும்பு, பெப். 16

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறவிருப்பதை ஒட்டி தலைநகர் கொழும்பில் தமிழர்கள் கைது செய்யப்படுவது அதிகரித்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த மாதத்தில் குறைந்திருந்த— தமிழர் கைது செய்யப்படும் சம்பவங்கள் — தற்போது மீண்டும் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

வீதிகளில் படையினர் கூடுதலான அளவு நிறுத்தப்பட்டுள்ளதாகவும்—

வீதிச் சோதனைகளும் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் முதல் கொழும்பில் லொட்ஜுகள், விடுதிகள் போன்றவையும், தமிழர் வாழும் பகுதிகளும் திடீர் திடீரென சுற்றி வளைக்கப்படுவதாகவும்—

அங்கிருக்கும் தமிழ் இளைஞர்கள் யுவதிகள் கைது செய்யப்பட்டு விசாரணைக்குக் கொண்டு செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்களை குழப்பும் நோக்குடன் தலைநகர் கொழும்பில் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என அரசு அஞ்சுவதே கைது சம்பவங்கள் அதிகரித்ததற்குக் காரணம் எனக் கருதப்படுகிறது. (உ-3)

## படகுச் சேவை

கிளாலி—பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ-3)

## கற்பிட்டியில் ஆயுதங்கள் மீட்பு

கற்பிட்டி, கந்தக்குளியில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டுகள், டைனமட் நிரப்புவதற்குப் பயன்படுத்தப்படும் 7,160 ஜெலிக் நைட்டுகள் ஆகியவற்றை நேற்று முன்தினம் புத்தளம் பொலீஸார் கைப்பற்றினர்.

இந்தியாவில் இருந்து இவ் வெடிமருந்துப் பொருள்களை கொண்டு வருவதற்கு பயன்படுத்தப்பட்ட 140 குதிரை சக்தி கொண்ட படகு இயந்திரம், மற்றும் கடத்தல் சேலைகள், சாரங்கள் ஆகியனவும் அப்போது கைப்பற்றப்பட்டன. (உ-எ-6)

## 4,500 பொலீஸார் கிழக்கிற்கு

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலை அமைதியாக நடத்துவதற்கு மேலதிகமாக 4 ஆயிரத்து 500 பொலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும்—

இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலீஸ் மா அதிபர் பிராங்க் டி சில்வா தெரிவித்தார். (உ-எ-6)

## கடத்தப்பட்ட தமிழர் சடலமாக மீட்பு

கடந்த 9 ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்ட வாழைச்சேனை கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரும் வாழைச்சேனை கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமான நல்லதம்பி ஆறுமுகத்தின் சடலம் களுவாஞ்சிக்குடி பொலீஸாரினால் கண்டெடுக்கப்பட்டது. (உ-எ-6)

## கண்டனம்

கத்தோலிக்க மதத்தவர்கள் விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளை சிங்கள மகா சம்பந்த பூமி புத்திக என்ற பௌத்த அமைப்பு கண்டித்துள்ளது.

கத்தோலிக்க மதத்தவர் தமது சமாதான முயற்சிகளை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று இந்த அமைப்பின் தலைவர் ஹரிச்சந்திர விஜயதுங்க பகிரங்கமாகக் கோரியுள்ளார். (உ-த)

## முச்சந்தி முரளி




உங்கை தேர்தல்.... அங்கை கைது ...... உது பனையிலை தேள் கொட்ட தென்னையிலை நெறி கட்டின மாதிரி எல்லோ இருக்கு.......!

## 'நரோமா' கப்பல் பயணிகள் 2 இடங்களில் கடும் சோதனை

யாழ்ப்பாணம், பெப். 16

'நரோமா' கப்பல் மூலம் பிரயாணம் செய்யும் பயணிகள் திருகோணமலையில் கடற்படையினராலும் பின்னர் காங்கேசன்துறையில் இராணுவத்தினராலும் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் திருகோணமலையில் வைத்து கடற்படையினரால் பயணிகள் சோதனையிடப்பட்டதாகவும் —

பின்னர் 'நரோமா' கப்பலில் காங்கேசன்துறைக்கு நேற்றுக் காலை வந்து சேர்ந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாச்சிக்குடாவில் குண்டு வீச்சு நால்வர் உடல் சிதறி மரணம்!

யாழ்ப்பாணம், பெப் 16

மன்னார் — நாச்சிக்குடாப் பகுதியில் குடியிருப்புகள் மீது நேற்றுக் காலை 10 மணியளவில் இரு புக்காரா விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் நால்வர் உடல் சிதறிப் பலியாகினார்கள். பலர் காயமடைந்தனர். பல வீடுகளும் சேதமடைந்தன.

சேந்தான்குளம், மாதகல், இளவாலை, தீவுப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தோர் தங்கியிருந்த குடியிருப்புகள் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

குடியிருப்புக்களை சுற்றி வட்டமிட்ட 'புக்காரா' விமானங்கள் மாறி மாறி 12 குண்டுகளை வீசின.

குண்டுவீச்சில் இருந்து தப்புவதற்காக ஓடி, காடுகளுக்குள் தஞ்சம் புகுந்த மக்களை நோக்கியும் குண்டுகள் வீசப்பட்டன.

இத்தாக்குதலில் அந்தோனிப்பிள்ளை மனோஜினி (16 வயது — சேந்தான்குளம்), முத்துராசா சரஸ்வதி (50 வயது — மாதகல்), சின்னராசா (70 வயது - மண்டைதீவு) உட்பட நால்வர் கொல்லப்பட்டனர்.

மேலும் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு திரும்பிய ஆயர் டி.பியுடன் இவ்வாரம் பேசுவார்

யாழ்ப்பாணம், பெப். 16

தமது யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று கொழும்பு போய்ச் சேர்ந்த அங்கிலிக்கன் ஆயர் அதிவண. கெனத் பெர்னாண்டோவை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இவ்வாரம் சந்திக்க இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ். விஜயத்தை ஆரம்பிப்பதற்கு முன்னரும் ஆயர் கெனத் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியிருந்தார். அப்போது பேசப்பட்ட விடயங்களில் தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தே ஜனாதிபதியுடன் ஆயர் கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்து ஆயர் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறுவார் என்றும் —

யாழ். மாவட்டத்தில் பொருள்களின் விலையேற்றம் மற்றும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆகியவை குறித்து தாம் திரட்டிய தகவல்களை அறிக்கை வடிவில் ஆயர் ஜனாதிபதியிடம் கையளிப்பார் என்றும் — தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## மீண்டும் கச்சதீவு அருகே சம்பவம்; ஸ்ரீலங்கா கடற்படையினர் சூடு! தமிழக மீனவர் நால்வர் காயம்!

தமிழக மீனவர் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் 4 மீனவர்கள் காயமடைந்தனர்.

கச்சதீவுக்கருகில் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, அப் பகுதிக்கு ரோந்துப் படகில் வந்த ஸ்ரீலங்கா படையினர் மீனவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் இதில் ஒரு மீனவர் படுகாயமடைந்தார்

இதனைத் தொடர்ந்து மீனவரின் படகை நெருங்கிய படையினர், படகில் இருந்த 3 மீனவர்களையும் கடுமையாகத் தாக்கி காயப்படுத்தினர்.

கடந்த மாதம் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் தமிழக மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதும் —

அதில் இருவர் கொல்லப்பட்டதும் —

அதனைத் தொடர்ந்து இந்திய அரசு இலங்கை அரசு மீது கண்டனம் தெரிவித்ததும் —

பின்னர் இலங்கை அதிகாரிகள் புதுடில்லி சென்று இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்காமல் இருப்பது குறித்து பேச்சுக்கள் நடத்தியதும் தெரிந்தவையே.

## இராணுவ ரீதியில் புலிகளை தோற்கடிக்கவே முடியாது!

### 'சண்டே ஐலண்ட்' விமர்சனம்

கொழும்பு பெப் 16

இராணுவ ரீதியில் தோற்கடிக்க முடியாத நிலையில் விடுதலைப் புலிகள் பலமடைந்துள்ளனர். தமிழ் மக்களின் ஆதரவையும் அவர்கள் பெற்றுள்ளனர்.

வெளிநாடுகளின் உதவியை பெற்றாலும் கூட விடுதலைப் புலிகளை அழிப்பதாயின் இரண்டு தசாப்தங்கள் தேவை

'சண்டே ஐலண்ட்' பத்திரிகையில் ராவணா எழுதிய விமர்சனக் கட்டுரை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

விடுதலைப் புலிகளைப் பேச்சுக்கு அழைப்பதன் மூலம் அவர்களைப் பலவீனப் படுத்தலாம் என்று அரசு எண்ணுகின்றது.

டி. பி விஜேதுங்கா அண்மைக்காலமாகத் தெரிவித்து வரும் கருத்துகள் விடுதலைப் புலிகளுக்கு தமிழர்களின் ஆதரவை அதிகரிக்கவே செய்துள்ளன. அத்துடன் ஸ்ரீலங்கா அரசு மீது தமிழ் மக்களுக்கு இருந்த சிறிதளவு ஆதரவும் குறைந்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது. தமிழ்க் குழுக்களையும் அது மேலும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பட்டினி கிடக்க நேரிடுமா....?

★ தென்தமிழீழத்தில் நெல் உற்பத்தி மிகையாக உள்ளது

★ வட தமிழீழத்திலும் முழு நிலப் பரப்பிலும் நெல் உற்பத்தி செய்யப்படின் மிகையாகக் கிடைக்கும்.

★ உப உணவுப் பொருள் உற்பத்தியிலும் தன்னிறைவுக்கு அப்பால் வருமானம் பெறும் வாய்ப்புண்டு

★ உரிய வசதிகள் இருப்பின் தமிழீழத்தின் வருமானத்தின் பெரும் பங்கினை மீன்பிடித் தொழில் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

நிலைமை இவ்வாறிருக்க, தெற்கிலிருந்து உணவுப் பொருள்களை வடக்கே அனுப்பாவிட்டால் அங்குள்ளவர்கள் பட்டினி கிடக்க நேரிடும் என்று ஜனாதிபதி கூறியது அர்த்தமுள்ளதா?

புள்ளி விபரங்கள் செறிந்த கட்டுரை 5 ஆம் பக்கத்தில்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை.

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து சுருக்கெழுத்தாளர் தரம் II (ஆங்கிலம்) பதவிக்கான விண்ணப்பங்கள் 1994-3-11 ஆம் திகதிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:

ரூபா 2890 — 10x55 — 7x65 — 3895/- (இத்துடன் நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றப் படியாக 1994 டிசம்பர் 31 ஆம் திகதி வரை சம்பளத்தின் 25 சத வீதத் சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்)

தகைமைகள்:

1. ஆங்கிலம் உட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது க. பொ. த (சாதாரணதர) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி.
2. பின்வரும் ஆகக் குறைந்த வேகங்களுடன் ஆங்கிலச் சுருக்கெழுத்தில் தேர்ச்சி.
   சுருக்கெழுத்து நிமிடத்திற்கு 80 சொற்கள்.
   தட்டச்சடித்தல் நிமிடத்திற்கு 35 சொற்கள்.

வயது:

40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

குறிப்பு:

அ) தெரிவு சோதனை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

ஆ) தமிழ் சுருக்கெழுத்தில் மேலதிக அறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும். தபால் மூலம் படிவங்களையும், விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக் கட்டளை/தபாற்கட்டளையுடன் 23x10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்ட ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் விவரங்கள் தெளிவின்றிக் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1994-02-11.

((சி-7343)



## ஸ்ரீ சங்கர வேதாகம கலாசாலை

இன்று 16.2.94 முதல் ஆரம்பம்

இடம்:- ஸ்ரீ அரசகேசரி பிள்ளையார் தேவஸ்தானம் நீர்வேலி

காலம்:- புதன், சனி, ஞாயிறு தினங்களில்.

நேரம்:- பி.ப 3 மணிமுதல் 5 மணிவரை

வேதம், ஆகமம், சோதிடம், சாஸ்திரம் கற்பிக்கப்படும்.

அந்தணச் சிறார்களை அன்புடன் அழைக்கிறோம்.

தேவஸ்தானம்
நீர்வேலி

சாம்பசிவ ஜெகதீஸ்வரக் குருக்கள்
அதிபர்

(29461)



## இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் 14ஆவது இசை விழா

கலாமண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்.

### ஐந்தாம் நாள் - இன்று

"வெங்கடேஸ்வரா"
கந்தசாமி அன் சன்ஸ், உடுப்பிட்டி
கந்தசாமி கிருபாகரன், உடுப்பிட்டி
ஆதரவில்

மாலை

**4-00 — 5-00** மங்கள இசை
கே. சந்திரன், என். கோவிந்தசாமி — நாதஸ்வரம்
ஆர். ஷண்முகசுந்தரம், ஆர். உலகநாதன் — தவில்

**5-00 — 5-10** மிருதங்க இசை
ஈ. ரகுலன் கே. மயூரன்

**5-10 — 5-30** வீணை இசை
செல்வி மு. சத்தியபாமாவின் மாணவர்கள்

**5-30 — 5-50** பாட்டு
பி. ஷயந்தா, கே. கௌரி, எஸ். காஞ்சனா, ஜீ. சீர்வாணி — பாட்டு
எஸ். சர்வேஸ்வர சர்மா — வயலின்
எஸ். நாகராஜன் — மிருதங்கம்

**5-50 — 6-15** வீணை இசை
சத்தியபாமா முத்துக்குமாரு — வீணை
கண்ணதாஸன் — மிருதங்கம்

**6-15 — 7-00** பாட்டு
வர்ணராமேஸ்வரன் — பாட்டு
வீ. கே. குமாரசாமி — வயலின்
எஸ். மகேந்திரன் — மிருதங்கம்

**7-00 — 7-30** மங்கள விளக்கேற்றல்
உரிமையாளர்: வெங்கடேஸ்வரா
கந்தசாமி கிருபாகரன்
எஸ். வீ. சிவகுருநாதன் — (வீ. எம். எஸ். நிறுவனம்)
டாக்டர் வீ. ஏகாம்பரம்

தலைவர்:
சங்கீதபூஷணம் எஸ். பாலசிங்கம் (தலைவர் அ. இ. த. மன்றம்)

பிரதம விருந்தினர்:
சுந்தரம் டிவகலாலா (உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் / கிளிநொச்சி)

சிறப்பு விருந்தினர்:
நா. க. சண்முகநாதபிள்ளை (அதிபர், யா / மத்திய கல்லூரி)

**7-30 — 8 30** இசைக் கச்சேரி
என். வீ. எம். நவரத்தினம் — பாட்டு
வி. கே. குமாரசாமி — வயலின்
எஸ். மகேந்திரன் — மிருதங்கம்

**8-30 — 9-30** பரத நாட்டியம்
கொழும்புத்துறை "கலையகம் மாணவிகள்"
தயாரிப்பு: லலிதாஞ்சனா கனகேந்திரன்

கலா ரஸிகர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்!

வாழ்த்துவோர்:
**வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்**
97, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

[சி-7321]



## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
செல்வி கு. கமலினியின் தந்தையார்
**சி. குணரெத்தினம்**

மட்டக்களப்பில் காலமானதையிட்டு அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அநுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

மருத்துவ பீட
1ஆம் ஆண்டு மாணவர்கள்

(29462)


## இசை விழா

யாழ்ப்பாணம், பெப். 16

இளங்கலைஞர் மன்ற இசை விழாவின் 5 ஆம் நாளான இன்று பி. ஷயந்தா, கே. கௌரி, எஸ். காஞ்சனா, ஜீ. சீர்வாணி, திரு வர்ணராமேஸ்வரன் ஆகியோரின் பாட்டு, ஈ. ரகுலன், கே. மயூரன் ஆகியோரின் மிருதங்க இசை, செல்வி மு. சத்தியபாமா மாணவர்களின் வீணை இசை, என். வீ. எம். நவரத்தினம் முதலியோரின் இசைக் கச்சேரி, கொழும்புத்துறை "கலையகம்" மாணவிகளின் பரத நாட்டியம் ஆகியன இடம் பெறும்.

மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும். விழாவில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலால பிரதம விருந்தினராகவும் யாழ். மத்தியக் கல்லூரி அதிபர் திரு நாக. சண்முகநாதபிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். (க-111)

## செஞ்சிலுவைசங்க ஸ்தாபகர் நினைவு விழா

யாழ்ப்பாணம், பெப். 16

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் அனுசரணையுடன் வலிகாமம் வடக்குப் பிரிவினர் ஏற்பாடு செய்துள்ள செஞ்சிலுவைச் சங்க ஸ்தாபகர் ஹென்றி டுனான்ட் ஞாபகார்த்த விழா எதிர்வரும் ஞாயிறன்று பிற்பகல் 2 மணிக்கு உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அந்த விழாவில் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படும்.

நிகழ்ச்சியின் பிரதம விருந்தினராக யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கலந்து கொள்வார். (இ—5)

## இலவசமாக ஒன்றரை லட்சம் மெட்ரிக் தொன் கோதுமை

கொழும்பு, பெப். 16

ஒரு லட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் கோதுமையை இவ்வருடத்தில் அமெரிக்கா இலங்கைக்கு இலவசமாக வழங்குகிறது. ஆண்டுதோறும் இலங்கை இறக்குமதி செய்யும் கோதுமையின் 20 சதவீதம் அமெரிக்காவினால் இலவசமாக வழங்கப்படுகிறது.

நாட்டில் வறுமையை ஒழிக்கும் நோக்கத்துடன் அமெரிக்கா மேலும் 580 கோடி ரூபாவை இலங்கைக்கு உதவியாக வழங்குகிறது. (ஒ-162)

## கொக்குவில் இந்து மாணவருக்கு ரோட்டரிப் பரிசு

யாழ்ப்பாணம், பெப். 16

கொழும்பு றோட்டரிக் கழகம் ஸ்ரீலங்கா போதைப் பொருள் தடுப்புச் சங்கத்துடன் இணைந்து நடத்திய றோட்டரி கட்டுரைப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் கே. ரமேஷ்குமார் பரிசு பெற்றுள்ளார்.

"இளைஞர் மத்தியில் போதைப் பொருள் பாவனையைத் தடுத்தல்" என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரை 10 பரிசுக் கட்டுரைகளில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டது.

இதற்கான பரிசளிப்பு வைபவம் கடந்த ஜனவரி 30ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க நினைவு மண்டபத்தில் நடைபெற்றது. (க)


## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### A/L 94 துரித மீட்டல்

ஆரம்பம்
**17 - 02 - 94**
வியா. 4 45 P.m.
கணக்கியல்
திரு. S. K. பிரபாகரன்
B. B. A


# சைவ தமிழ்ப் பாரம்பரியத்தின் சின்னம் அறிஞர் குலரத்தினம்

## அஞ்சலி கூட்டத்தில் உரை

நாவலருக்குப் பின்வந்த சைவத்தமிழ் பாரம்பரியத்தின் சின்னமாக விளங்கியவர் முதறிஞர் க. சி. குலரத்தினம். அன்னாரின் இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் இரங்கல் உரையாற்றிய பண்டிதர் சு. வேலுப்பிள்ளை இவ்வாறு கூறினார்.

பண்டிதர் க. பஞ்சாட்சரம் தலைமையில் இறுதி அஞ்சலிக் கூட்டம் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது.

திரு. வேலுப்பிள்ளை மேலும் கூறியதாவது:

சிறந்த பாட நூலாசிரியராக பணியாற்றிய அவரின் கருத்துக்களே இப்பொழுது வெளிவந்த நூல்களுக்கு முன்னோடியாக அமைந்தன. நட்புக்கு இலக்கணமாகி நண்பர்களின் உயர்வுக்கும், சிறப்புக்கும் அடிகோலியதமிழறிவும் சைவமும் வளர்த்த ஒரு பரம்பரையின் தலைசிறந்த பிரதிநிதி அவர்.

யாழ். பல்கலைக் கழக தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் பேசும் போது கூறியதாவது!

யாழ். பல்கலைக் கழக பரமேஸ்வரன் ஆலயம் குறித்த தகவல்களை முதறிஞர் குலரத்தினம் கட்டுரை ஒன்றின் மூலம் தெளிவாக்கினார். அவர் தமது ஆற்றலை மக்கள் நலன்பெறப் பயன்படுத்தினார். அவர் எமது பாரம்பரியக் கல்வியின் உயிரோவியப் ஆவார்.

நல்லூர் பிரதேசச் செயலரும் உதவி அரசாங்க அதிபருமான திரு. ஆ. மகாலிங்கம் பேசும் போது கூறியதாவது: முதறிஞர் எமது பண்பாடு வரலாறுகள் குறித்த தேடுதல் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அவர் ஏராளமான சைவத்தமிழ் நூல்களை வெளியிட்டும், எமது இனத்திற்கும், மதத்திற்கும் தொண்டாற்றினார். பண்பாளரான அவர் தெளிந்த உள்ளமும் நிறைந்த நாவன்மையும் கொண்டவர். அவரது மறைவு தமிழுலகிற்கு ஏற்பட்ட மிகப்பெரிய இழப்பாகும் என்று கூறினார்.

அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ், திரு. க. சிவராமலிங்கம், வண. பிரான்சிஸ் யோசெப் அடிகளார், திரு. ப. கந்தையா, திரு. நரேன் உட்பட பல அறிஞர்களும், பிரமுகர்களும் இரங்கலுரை நிகழ்த்தினார்கள். திரு. சந்திரபோஸ் நன்றி கூறினார். (க-111)

## தபால்களை சேர்க்கலாம்

யாழ்ப்பாணம், பெப். 16

இன்று பருத்தித்துறையில் இருந்து கொழும்பு செல்லும் மாஹோ கப்பலில் யாழ். குடாநாட்டுத் தபால் பைகள் அனுப்பி வைக்கப்பட இருப்பதாகவும்—

எனவே பொதுமக்கள் தங்கள் கடிதங்களை இன்று காலை 8 மணிக்கு முன்னர் யாழ் பிரதம அஞ்சலக தபால் பெட்டியில் சேர்க்குமாறும் யாழ். அஞ்சல் நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது. (த-163)

## இந்தியா வெற்றி

ராஜ்காட், பெப். 16

ராஜ்காட்டில் இந்திய— இலங்கை அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற முதலாவது ஒருநாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத்தில் இந்திய அணி 8 ஓட்டங்களினால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றது. நவ்ஜோத் சிங் சித்து 108, மனோஜ் பிரபாகர் 67 ஓட்டங்களைப் பெற்றனர்.

இலங்கை அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றது. அஸங்க குருசிங்க 67 ஓட்டங்களைப் பெற்றார். (உ)

## ஆலயங்களில்

பொலிகண்டி சல்லியம்பதி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த உற்சவம் இன்று பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்திப்புலம் அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் கோயிலின் வருடாந்த உற்சவம் இன்று பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். (த-30)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம, பெப். 16

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கோண்டாவில் அரசியல்துறை மாவட்டச் செயலகத்தில் நடைபெறும். (த)

## உடற்பயிற்சி போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 16

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிமுதல் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

இதே தினத்தில்—

நல்லூர் கல்விக் கோட்டத்துக்கான உடற்பயிற்சிப் போட்டிகள் காலை 9 மணிக்கும், யாழ். கல்விக் கோட்டத்துக்கான உடற்பயிற்சிப் போட்டிகள் பிற்பகல் 2 மணிக்கும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (த-5)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ். பல்கலைக்கழக மெய்யியற் கழகத்தின் ஆதரவில் "ஆன்ம தரிசனம்" அல்லது "சாங்கிய சித்தாந்தம்" எனும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று, இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழகப் புவியியற்றுறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். திரு. மு. ஞானப்பிரகாசம் கருத்துரை வழங்குவார்.

### தமிழர் புனர்வாழ்வுக் கழக

## மரம் நடுகை திட்டம் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், பெப். 16

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நடத்தப்பட்டுவரும் பாடசாலைகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான மரம் நடுகைத் திட்டத்தின் முதலாம் ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் தென்மராட்சி கோட்டத்தின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பாடசாலைகளுக்கான போட்டியில் தம்பாட்டி அ. த. க. பாடசாலை வெற்றியீட்டியுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான போட்டிகளில் முதலாம் இடத்தை மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த இ. சிவசுதர்ஜனனும்—

இரண்டாம் இடத்தை தம்பாட்டி அ. த. க. பாடசாலையைச் சேர்ந்த வே. விநோத்குமாரும்—

மூன்றாம் இடத்தை அதே பாடசாலையைச் சேர்ந்த மா. சிவானந்தனும் பெற்றுள்ளனர் (இ—5)

## தவக்கால நாட்கள்

குருநகர், பெப். 16

யேசு கிறிஸ்துவின் திருப்பாடுகளை நினைவு கூரும் தவக்கால நாட்கள் இன்று முதல் 40 நாட்களுக்கு கத்தோலிக்க மக்களால் அனுஷ்டிக்கப்படும். (த-51)


இந்து சமயப் பேரவை யாழ்ப்பாணம்.

(இந்து சமய அமைப்புக்கள், இந்துக் கோவில் தர்மகர்த்தா சபைகள்; இந்து சமய அபிமானிகளின் கூட்டமைப்பு)

## வருடாந்தக் கூட்ட அறிவித்தல்

காலம்: 06 03-1994 ஞாயிறு காலை 10 00 மணி
இடம்: நல்லை ஆதீனம், நல்லூர்.

சாதாரண அங்கத்தவர்கள் 1993 ஆம் ஆண்டுக்கான சந்தா ரூபா 100/- அல்லது ரூபா 500/- செலுத்தி உறுப்புரிமையை புதுப்பித்துக் கொள்ளுமாறும் அல்லது ஆயுட்கால உறுப்பினராகும் படியும் புதிதாகச் சேர விரும்புவோர் 28-2-94 ஆம் திகதிக்கு முன்னர் பொருளாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

பிரேரணைகள் அனுப்ப விரும்புவோர் 28-2-94 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

நா. முத்தையா — தலைவர்
சி. சக்திகிரீவன் — கௌரவ செயலாளர்

நல்லை ஆதீனம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி/7346)



## கண்காட்சி

சித்தமருந்துவ மாணவர் வாரத்தை முன்னிட்டு

21-2-94 திங்கட்கிழமை
22-2-94 செவ்வாய்க்கிழமை
23-2-94 புதன்கிழமை
— முற்பகல் 9. 30 மணி பிற்பகல் 4. 30 வரை கண்காட்சி நடைபெறும்

இடம்:- யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறை, கைதடி.

1. ஆரோக்கிய வாழ்விலும், நோயுள்ள நிலையிலும் மூலிகையின் பங்கு.
2. போர்க்கால சூழ்நிலையில் தொற்று நோய்களில் இருந்து எவ்வாறு பாதுகாப்பது
3. பாடசாலை மாணவ பராயத்தில் உடல், உள வளர்ச்சிகள் அதற்கேற்ப எடுக்கவேண்டிய நிறையுணவு, இப்பராயத்தில் ஏற்படும் நோய்கள், தடுக்கும் முறைகள் ஆகிய பல அம்சங்கள் அடங்கியுள்ளன.

அன்பளிப்பு:- ரூபா **5/-**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சன்ஸ்ரார் ஜுவலறி
147B, (337) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(29462)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நெருப்புடன் விளையாடும் முஸ்லிம் காங்கிரஸ்

## அனுரா சொல்கிறார் இப்படி

கொழும்பு, பெப். 16 கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நெருப்புடன் விளையாடுகிறது.

அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா கல்முனையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் பகுதிகளில் இனவாதத்தைத் தூண்டும் பிரசாரத்தில் முஸ்லிம் காங்கிரஸ் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.


யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி
கல்விக் கண்காட்சி-1994

வாழ்க்கைத் திறன் பாடம் உட்பட ஏனைய பாட நெறிகளையும் விளக்கும் வகையிலான காட்சிப் பொருள்களைக் கொண்டது.

காலம்: நாளை (17 – 02 – 1994)
வியாழன் காலை 9.00 — மாலை 5.00 மணி வரை

கண்காட்சியை ஆரம்பித்து வைப்பவர்;
திரு. ச. சுப்ரமணியம்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர் தொழில் நுட்பம்)
யாழ். கல்வித்திணைக்களம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
(சி-7345)



நீண்ட இடைவெளியின் பின்
வட்டுக்கோட்டையில்
யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ் மன்ற
ஆதரவில்
யாழ். பல்கலைக்கழக
நாட்டார் வழக்கியற் கழகம்
வழங்கும்
சத்தியவான் சாவித்திரி
(புராண இசை நாடகம்)

தயாரிப்பு, நெறியாள்கை:-
பேராசிரியர் இ. பாலசுந்தரம்
இடம் :- யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபம்
காலம் :- 16 - 02 - 94 புதன் பி. ப 4-00 மணி

அன்பளிப்பு: 20/-
மாணவர்களுக்கு: 10/-

விளம்பர அன்பளிப்பு:
ஞானர்ஸ் ஹாட்வெயார் ஸ்ரோஸ்
சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.
(சி-7341)



அரசினர் போது வைத்தியசாலை
யாழ்ப்பாணம்
பதவி வெற்றிடம்

இவ் வைத்தியசாலையில் உயிரியில் மருத்துவ பொறியியல் (Engnieering) பிரிவுக்கு முகாமி (Foreman) பதவி ஒன்றுக்கான விண்ணப்பங்கள் 28-02-94 திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

தகைமைகள்:

இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க. பொ. த. (சாதாரண) தேர்வில், சிங்களம்/தமிழ் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் உட்பட இன்னொரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

அத்துடன்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில், எந்திரவியல் (Mechanical) மின்னியல் (Electrical) அல்லது இலத்திரனியல் (Electronics) பொறியியற்துறையில் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நெறியைப் பூர்த்தி செய்தவராய் இருத்தல் வேண்டும்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்லூரி ஒன்றில் எந்திரவியல் மின்னியல் அல்லது இலத்திரனியல் பொறியியல் கற்கைநெறி ஒன்றை பூர்த்தி செய்வராக இருத்தல் வேண்டும்.

வயது:

28-02-1994இல் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசசேவையில் உள்ளவர்களுக்கு வயதெல்லை கிடையாது.

வேதனம்:

பொது நிர்வாக சுற்றறிக்கை 387இன்படி
ரூபா 19,440 — 7 X 480 — 10 X 600 — 28,800
பொது நிர்வாக சுற்றறிக்கை 37/92இன் படி
ரூபா 27, 180 — 7 X 660 — 10 X 780 — 39,540

விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்பட்டு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு தெரிவுக்காக அனுப்பி வைக்கப்படும்.

பணிப்பாளர்,
டாக்டர் (செல்வி) என். கனகரெட்ணம்.
[சி-7339]


# பாடத்திட்டம் மாற்றம் குறித்து மாணவர் மத்தியில் குழப்ப நிலை

## கல்விப் பணிப்பாளர் கொழும்பு பயணம்

யாழ்ப்பாணம், பெப். 16 இடைநிலை வகுப்புக்களான ஆண்டு 9, 10, 11ஆம் வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் போதிக்கப்படும் பாடங்கள் திடீரென மாற்றப்பட்டுள்ளதாகச் செய்தி வெளிவந்துள்ளது குறித்து மாணவர்கள் மத்தியில் குழப்ப நிலைமை இருந்து வருகிறது.

கொழும்பு செல்லும் வலயம் – 1 கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி, புதிய பாடத்திட்டத்தை குடாநாட்டில் அமுல் செய்வதில் இருந்து வரும் சிக்கல்கள் குறித்து கொழும்பில் கல்வி அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார்.

கொழும்பு புறப்பட முன்னர் உதயன் செய்தியாளரிடம் அவர் கருத்துத் தெரிவிக்கையில், புதிய கல்வித்திட்டம் மாணவர்களின் சுமையை அதிகரித்து அவர்களின் மனோநிலையைப் பாதிக்கப்போகிறது என்றார்.

கல்விக் கொள்கையில் அரசியல் தலையீடு இருந்தால், ஆட்சி மாறுகின்றபோதெல்லாம்இவ்வாறான திடீர்மாற்ற நிலைமை உருவாகத்தான் போகிறது என்றும் அவர் கூறினார்.

வலயம் – 2 கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி கருத்துத் தெரிவிக்கையில் புதிய திட்டம் இவ்வாண்டு 9ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றாலும் இத்திட்டத்தை அமுல் செய்வது தொடர்பாக இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றார்.

புதிய கல்வித் திட்டத்தின் படி ஆங்கில இலக்கிய பாடம் போதிப்பதற்கு ஆசிரியர்கள் போதியளவு இல்லை என்றும் அவர் கூறினார். (இ-3-162)

## புலிகளின் மாணவர் அமைப்பினால்

# கிளிநொச்சிப்பகுதியில் புதிய பாடசாலைகள்

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு புதிய பாடசாலைகளை அமைத்து வருகின்றதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கிணங்க, துணுக்காய் வட்டம்— ஐயம்பிள்ளை கிராமத்திலும்— அக்கராயன் வட்டம்— கண்ணகிபுரத்திலும் இரண்டு பாடசாலைகள் மொத்தமாக நாலரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

இப் பாடசாலைகளில் போதிக்க பத்து ஆசிரியர்களை நியமித்து, அவர்களுக்கு மாதாந்த சம்பளமும் வழங்கி வருவதாக கிளிநொச்சிக் கோட்ட மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் திரு. புண்ணியம் தெரிவித்தார்.

மாணவர்களுக்கு இலவச சீருடைகளையும், எழுது கோல்களையும் மாணவர் அமைப்பு வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாண்டியன்குளம் கிராமத்தில் முதலாம் ஆண்டு முதல் ஆண்டு 5 வரை மாணவர்கள் கல்வி பயிலவென புதிய பாடசாலை ஒன்றை அமைக்க விடுதலைப்புலிகள் கிளிநொச்சிக் கோட்ட மாணவர் அமைப்பு நடவடிக்கை எடுத்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்காப் படைகளின் விமானத் தாக்குதல்களால் பாடசாலைகள் சேதமடைந்திருப்பதையும், மாணவர்கள் மரநிழலில் அமர்ந்து கல்வி பயின்று வருவதையும் கருத்திற் கொண்டே புதிய பாடசாலைகளை அமைக்கும் பணியில் கிளிநொச்சி கோட்ட விடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்பு ஈடுபட்டுள்ளது. (த-எ)


ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள்
தேவஸ்தானம், களபாவோடை
ஏழாலை தெற்கு.
அன்னையின் அவதார தினம்

அருள்மிகு வசந்தகுமாரி அம்மன் தாயாரின் அவதார தினம் இன்று புதன்கிழமை வசந்த நாகபூஷணி அம்பிகையின் திருவாலயத்தில் நடைபெறும். இன்று காலை 8மணி முதல் பிற்பகல் 2 மணிவரை நிகழ்ச்சிகள் இடம்பெறும். அன்னையின் அவதார தினம் வழமைபோல் ஊனமுற்றவர்கள், வயோதிபர்கள், அன்னையின் அரவணைப்பிலுள்ள இளஞ்சிறார்கள் மற்றும் மெய்யடியார்களுடன் கொண்டாடப்படவுள்ளது. பகல் 1 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்.

அம்பிகை அடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு அன்னையின் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

அன்னையின் அவதார தினம் கொண்டாடப்படும் வேளையில் திருவாலயத்தில் அயராது பணிபுரிந்து வருபவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கௌரவிக்கப்படவிருப்பவர்கள்:-

திரு குமாரசுவாமி ஐயா
(இசை ஞான திலகம்)
திரு நாகேஸ்வரன் எம். ஏ.
திரு சிவகுமார்
(அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம்)
திரு நித்தியானந்தன்
திரு இராசதுரை
(கிளாக்கர் ஐயா)
திரு. பாஸ்கரன்
திரு அருந்தவராசா
(சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை - அத்தியட்சகர்)
திரு ஹரிச்சந்திரா

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.
— தேவஸ்தானம்.
(சி-7344)



உ
சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்
தேவஸ்தான தர்மகர்த்தாசபை
கேள்விப்பத்திரம் கோரல்

கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கூறுவிலைகள் தொழில் நுட்பம் தெரிந்தவர்களிடம் இருந்து தனித்தனியாகக் கோரப்படுகின்றன.

1. தேரைச் சுத்தம் செய்து வர்ணம் தீட்டுதல் (வேலை செய்வதற்கான கூலிக்கு மட்டும் கூறுவிலை) மை கொடுக்கப்படும்
2. புதிதாக ஒரு சகடை செய்தல் (கூறுவிலை தேவையான பொருள்களுக்கும் செய்வதற்கான கூலிக்கும்)

கூறுவிலைகளை வேறு வேறாக 28-02-1994 க்கு முன்னர், திரு. சி. மார்க்கண்டு, முகாமையாளர், சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம், மானிப்பாய் என்னும் முகவரிக்கு எழுதி மூலம் அனுப்புக.

தேவையான மேலதிக விவரங்களுக்கு நேரடியாகத் தொடர்பு கொண்டு விடயங்களை அறிந்து கொள்க.

செயலாளர்,
(29440) தர்மகர்த்தா சபை.


## வெளிமாவட்ட எழுதுவினைஞர்கள்:

# நியமனத்தை ஏற்கும்படி மாகாணசபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 16 மாகாணசபையின் எழுதுவினைஞர் பதவிக்கு விண்ணப்பித்து வெளிமாவட்டங்களில் நியமனம் பெற்றோர் உடனடியாக தமது நியமனங்களை பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு வடக்கு-கிழக்கு மாகாணசபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பதவி ஏற்பதற்கான காலக்கெடு கடந்த டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ள போதிலும், இவ்வாறான அறிவிப்பு தற்போது யாழ். செயலகத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

இதுவரை தமது பதவிகளை ஏற்கச் செல்லாத நியமனம் பெற்றோர், தமது பிரயாண வசதிகள் தொடர்பாக, யாழ் அரச அதிபரை சந்திக்குமாறு மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் கேட்டுள்ளார். (ஒ-162-5)

# மதத்தின் அந்தஸ்துக்கு அரசியலும் வந்துவிட்டது

## சர்வமதக் கூட்டத்தில் கவலை

கொழும்பு, பெப். 16 இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்தவம் மற்றும் இந்து மதம் போன்று அரசியலும் இந்த நாட்டில் ஒரு 'மதம்' என்ற அந்தஸ்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

வண. திதா ஒஸ்கார் அபயரத்தினா குருநாகலில் நடந்த சர்வமதக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று மக்கள் 'அரசியல்' என்ற ஐந்தாவது மதத்தை வழிபடுவோர்களாக மாறியுள்ளனர்.

மதங்களில் எல்லாம் பெரியது 'அரசியல்' என்று அரசியல்வாதிகள் எண்ணுகிறார்கள். எல்லாமே அரசியல் வாதிகளுக்குத்தான் சொந்தம் என்று அவர்கள் நினைக்கக் கூடாது. தங்களுக்கு எல்லாம் தெரியும் என்றும் அரசியல் வாதிகள் எண்ணக்கூடாது.

—இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-எ)

## பேடன் பவல் நினைவு தினம்

மானிப்பாய், பெப். 16 சாரண இயக்கத்தின் ஸ்தாபகர் பேடன் பவல் பிரபுவின் நினைவு தினம் எதிர்வரும் 22 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு சங்கானை சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. (இ—5)

# சகமனிதர் துயர் தீர்ப்பதற்கு பாடுபட்ட உத்தம கல்விமான்

## நேசையாவுக்கு ஆயர் கெனத் பாராட்டு

யாழ்ப்பாணம், பெப். 16 அமரர் நேசையா 40 க்கு மேலான ஆண்டுகளாக சகமனிதர்களின் துயர் தீர்க்கப் பாடுபட்ட ஓர் உத்தம மனிதர் ஆவார். அவர் ஒரு மாபெரும் ஆசிரியர்; கல்விமான்; ஆசிரியர் சங்கங்களின் ஸ்தாபகர்; கூட்டுறவுத் துறையின் அமைப்பாளர்; யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் உறுப்பினர்; சமூக சீர்திருத்த வாதி''

ஆயர் அதிவண. டாக்டர் கெனத் பெர்னாண்டோ இவ்வாறு கூறினார்.

சுண்டிக்குளி பரியோவான் ஆலயத்தில் நடைபெற்ற அமரர் குணசேகரம் நேசையாவின் வாழ்க்கைக்காகவும் பணிகளுக்காகவும் நன்றி செலுத்தும் ஆராதனையில் அவர் நற்கருணை வழிபாட்டை நடத்தினார்.

அவர் மேலும் கூறியதாவது;

நேசையா தாய்மொழி மூலம் கல்வி நடைபெற வேண்டும் என்று பாடுபட்டு உழைத்தார். கல்விப் பிரச்சினைகள் பற்றி அவர் தீர்க்கதரிசனமான முறையில் புரிந்து கொண்டார்.

அத்துடன் அவர் தந்தை செல்வா நினைவு நிதியத்தின் தலைவராகவும் யாழ் மாநகர சபை நூலகத்தின் ஆலோசகர் கமிட்டியின் ஒரு உறுப்பினராகவும் பணியாற்றினார்.

ஆயரின் மனைவி திருமதி சித்ரா பெர்னாண்டோ இந் நிகழ்ச்சியில் உரை நிகழ்த்திய போது கூறியதாவது;

திரு. நேசையாவே எனது குரு 35 ஆண்டுகளுக்கு முன் நான் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் டிப்ளோமாப் பயிற்சி செய்த போது அவரை எனது குருவாக ஏற்றுக்கொண்டேன். இன்று வரை அவரே என் குரு.

ஆயர் அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன் தமது உரையில் கூறியதாவது:

திரு. நேசையா இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் இந்தியாவில் கற்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். மகாத்மா காந்தி போன்ற தலைவர்களை அவர் நேசித்து அவர்கள் வழி நடந்தார். சர்வோதய இயக்கம், நூல்நிலைய இயக்கம், கூட்டுறவு இயக்கம், வலது குறைந்தோர் புனர் வாழ்வு இயக்கம் ஆகியன திரு. நேசையாவின் சிந்தனையை ஆட்கொண்டன என்றார்.

கைதடி நவீல்ட் பாடசாலையின் ஆசிரியர் – மாணவர்களின் பாட்டு நிகழ்ச்சியும் ஆராதனையில் இடம்பெற்றது.

அருட்திரு. எஸ். பி. நேசகுமார் ஆராதனை நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். (க-161)

# உணவை ஒறுப்பதால் மட்டும் தவக்கால பயனை பெற முடியாது

## நமக்குத் தேவைப்படுவதை பிறருக்கும் வழங்க வேண்டும்

சாம்பல் புதனான இன்றுடன் தவக்காலம் ஆரம்பமாகிறது. அதனை முன்விட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

''தவக்காலத்தில் என்ன செய்யப் போகின்றோம்?'' என நீங்கள் கேட்கிறீர்கள். போர், பிணி ஆகியவற்றினால் இன்று நம் சகோதர சகோதரிகள் கடுமையாகத் துன்புறும் இவ்வேளையில் சிலவேளை உணவை மட்டும் ஒறுத்து வாழ்வது அவ்வளவு பெரிய தவமாகிவிடாது எனவும் நீங்கள் உணருகிறீர்கள்.

எப்போதும் அவசியமான தனித்தியான வாழ்வை ஒறுத்தல் நமக்கு உணர்த்திக் காட்டுகிறது; ஆயினும் இத் தவக்காலத் திருவழிபாட்டை இன்னும் சிறந்த முறையில் கடைப்பிடிக்கத் திருச்சபை கிறிஸ்தவர்களை அழைக்கின்றது.

தவக்காலம் நமக்கு ஒரு தனிச்சிறப்பைக் காட்டுகிறது. இறைவனின் திருச்சபை பாவிகளின் திருக்கூட்டமாதலால் அது கிறிஸ்துவின் திருப்பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய மறையுண்மைகளைப் புதுப்பித்து வாழத் தன்னையே தயாரித்துச் செய்கிறது என்பதை இவ்வுலகத் தவக்காலம் உலகுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

ஒவ்வொருவரின் தனிப்பட்ட தவ உணர்விலிருந்து தான் திருச்சபையின் பொதுப் பிரதிபலிப்பு உருவாகிறது; இத் தவ உணர்வுதான் நம் உள்ளார்ந்த வாழ்வை வலுப்பெறச் செய்து உறுதியளிக்கவும் செய்கிறது.

### உண்மைத் தவம் எது?

நமக்குத் தேவையில்லாததை மட்டும் பிறருக்கு வழங்குவதில் பெருமையடைய வேண்டாம். நமக்குத் தேவைப்படுவதையும் கொடுப்பதில் தான் தவம் மேன்மையடையும்.

நற்செய்தியில் வரும் ஏழை விதவை இறைவன் தனக்குக் கொடையென வழங்கியதையும் கொடுத்தது போல நம் தவம் இருக்க வேண்டும். மனுக்குலத்தின் பொது உரிமையைப் பாதுகாக்கும் சூழ்நிலையைப் பேணி வளர்க்கும் எண்ணமே இல்லாது, உலகஇன்பத்திற்கும் உல்லாசத்திற்கும் மக்களைத் தூண்டும் நாகரீக அடிமைத்தனத்திலிருந்து தன்னையே விடுவித்துக் கொள்வதுதான் தவம்.

பசிப்பிணி ஒழிப்புத் தவக்கால இயக்கத்திற்கு உதவிட உங்கள் தலத் திருச்சபை உங்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றது. இதனால் ஒன்றுமில்லாதவர்களுடனும் குறைவாக உள்ளவர்களுடனும் உங்கள் உடமைகளைப் பகிர்ந்து கொள்ளும் தவ உணர்வைச் செயல்படுத்த உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது.

### பகிர்ந்து கொள்ளுங்கள்

உங்களை இன்னும் ஒருவரும் வேலைக்கு அமர்த்தவில்லையே. என்று சந்தை வெளியில் சோம்பேறியாய் நிற்கிறீர்களா, கிறிஸ்தவ அன்பு என்னும் தோட்டத்தில் வேலையாட்களோ குறைவு. திருச்சபை இதற்கென உங்களை அழைக்கிறது. சிறையிலோ, ஆடையின்றியோ, துன்புறுத்தப்பட்டோ, அந்நியராகவோ, பசியாகவோ, வீடு இன்றியோ நிற்கும் கிறிஸ்துவுக்கு உதவி செய்ய இன்னும் காலம் தாழ்த்த வேண்டாம். அடிப்படைத் தேவையற்று நிற்கும் சகோதரர்கள் தங்கள் மனித மேன்மையை அடைய நீங்கள் உதவுங்கள்.

இவ்வாறு பகிர்ந்துகொள்ளும் பண்பிற்கும் தவ உணர்விற்கும் சான்று பகர உறுதி கொண்டுள்ள உங்கள் அனைவரையும் பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் நாம் ஆசீர்வதிக்கின்றோம்.

(நன்றி: பாதுகாவலன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இணுவில் கே. கே. எஸ். வீதியில் இரண்டரைப் பரப்பு காணியுடன் 5400 சதுர அடி மாடிக் கட்டடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: செ. பொன்னம்பலம், கே. கே. எஸ். வீதி, இணுவில். (29415)

9HP டீசல் என்ஜின் (வாட்டர்) 12'' 10'' இறைண்டர்கள் செற்றாக விற்கப்படும். முகவரி: நாராயணன் மில்ஸ், குஞ்சர் கடையடி, கரணவாய். பார்வையிடும் நேரம்: 1மணி முதல் 5 மணி வரை. (29449)

நல்ல நிலையில் உள்ள கண்ணாடி அலுமாரி 7 அடி உயரம், 6அடி அகலம் விற்பனைக்கு. வர்த்தகர்களின் பாவனைக்கு உகந்தது. தொடர்பு: இல. 24, மே/பா உதயன், K. K. S. வீதி, சுன்னாகம். (7001)

கண்ணாடி அலுமாரி, சோக்கேஸ், தையல்மெஷின், சேந்தைக்கட்டில், பிள்ளைத் தொட்டில், யானைச்சோடா வெறுப்போத்தல்கள், மிட்டாய்வண்டில், கடைத்தள பாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: மல்லிகா ஸ்ரோர்ஸ் மத்தியசந்தையடி, மானிப்பாய். (29441)

றொபின் (Robin) EY20 நீர் இறைக்கும் யந்திரம் Scooter Tyres போட்ட வண்டிலுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பிற்பகல் 2-30க்கு பின்னரும், சனி, ஞாயிறு 10-00 க்கு முன்பும், 2-30க்கு பின்பும் இல. 387, கோயில் வீதி, நல்லூர். (29454)

### மணிக்கூடுகள் திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். சகல மணிக்கூட்டு பற்றறிகளும் உதிரிப்பாகங்களும் எம்மிடம் உண்டு. சஜன்ஸ் வாச் வேக்ஸ், இல: 12, ஸ்ரேசன் வீதி, (சந்திக்கு அருகில்), சுன்னாகம். (6967)

### மணமகள் தேவை

யாழ். இந்து 31 வயது, திருவாதிரை நட்சத்திரம் உயர்ந்த அழகிய சுவிட்சர்லாந்தில் வேலைபார்க்கும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த வாலிபருக்கு உள்ளூரிலோ/வெளியூரிலோ மணமகள் தேவை. கத்தோலிக்க 43 வயது யாழ். அரசாங்க உத்தியோகத்தருக்கும் மணமகள் தேவை. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். இல: 610 C/o உதயன், யாழ்ப்பாணம். (29442)

### தேவை

தகரப் பந்தல் விற்க விரும்புவோர் உடனடியாக தொடர்பு கொள்ளவும். முகவரி: அம்பாள் வீடியோ சென்ரர், 894, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (29433)

### இலவச திருமண சேவை

32 வயது ஆண், திருவோணம், கிரகபாவம் 33, M. S. C. Teacher Brunei 31 வயது, பெண் சதயம், செவ்வாய் 8, கிரகபாவம் 54, M. A. (M. Phil) Lecturer மணமக்கள் தேவை. விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி. (29453)

27 வயது, பூராடம், செவ்வாய் 8, Business Administration கற்று U. K.இல் வியாபாரம் செய்பவருக்கு ஆங்கில அறிவுடைய மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில் செய்து அழைக்கலாம். விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி. (29452)

### தவறிவிட்டது

12-02-94 அன்று நண்பகல் நல்லூர் கந்தசுவாமி கோயிலை அண்மித்த வீதியில் சிறுதொகைப் பணம் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். வெ. கிருஷ்ண பிள்ளை, இல 86, சட்டநாதர் வீதி, நல்லூர். (29455)

### தொடர்புகொள்ளவும்

G. C. E. (O/L) வகுப்புகளிற்குட்பட்டவர்களுக்கு வீட்டிற்கு அழைத்து கணிதம் கற்பிக்க விரும்புகிறீர்களா? தொடர்புகொள்ளவும்: புதிய விஞ்ஞானக் கல்வி நிலையம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (6961)

### கால்நடை மருந்துகள்

எம்மிடம் கால்நடைகளுக்குத் தேவையான மருந்துகள் விற்பனைக்குண்டு. தேவையானோர் தொடர்பு கொள்ளவும். சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம். நாகொக்ஸ் (Narcox), பொலிக்கன் (Folligon), றின்ரால் 500 கிராம் (Rintal – vet – 10), தைகால் (Thiacal), பியூறோசிலிடின் (Furozeliden) பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி. (சி–7342)

### ரமணிசசந்திரன

41 விதமான ரமணிச்சந்திரனின் நாவல்களும், கண்ணதாஸன், சிவசங்கரி, சுஜாதா மற்றும் பிரபல எழுத்தாளர்களின் நாவல்களும் விற்பனையாகிறது. பிரதிகளுக்கு முந்துங்கள். ராஜன் புத்தகசாலை, 12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (6958)

### மணிக்கூடு திருத்தவேலை

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன், திருத்திக் கொடுக்கப்படும். நல்ல நிலையிலுள்ள மணிக்கூடுகள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம் கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. (சி/7215)

### பணிப்பெண் தேவை

சிங்கப்பூரில் சமையல் மற்றும் எல்லா வீட்டு வேலைகளும் செய்ய அனுபவமுள்ள பெண் தேவை. பாடசாலைப் படிப்புபற்றிய ஆதாரங்களும், அடையாள அட்டையும் கொண்டு உடன் நேரில் வரவும். S. K. குலசேகரம், ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர். டச் றோட், மீசாலை. (விக்கினேஸ்வரா பாடசாலை முன்பாக) (29400)

### விற்பனையாகின்றது

ரமணிச்சந்திரன் எழுதிய சகல புத்தகங்களும் (1993ஆம் ஆண்டு உட்பட) வந்து வேகமாக விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. மகமிலன் புத்தகசாலை – யாழ்ப்பாணம், ஸ்ரீகாந் புத்தகசாலை - யாழ், ஸ்ரீகாந் புத்தகசாலை - நல்லூர். (சி-7243)

### MATHS

ஆண்டு 5லிருந்து O/Lவரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 27 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறடைய கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (6970)

### கல்வி

Spoken English With Grammar உட்பட பாலர் வகுப்பிலிருந்து A/L வரை சகல பாடங்களும் சிறந்த முறையில் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (6971)

---

வட பிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் நடத்தும் தையல், தட்டச்சு பயிற்சி நிதிக்கான

## இரண்டு நாள் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்

காலம்: **19 - 02 - 94, 20 - 02 - 94** காலை 8-00 தொடக்கம் 12-00 மணிவரை, மாலை 2-00 தொடக்கம் 5-00 மணிவரை

ஒன்பது பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் கழகங்கள்

| | | |
|---|---|---|
| 1) பாடுமீன் | விளையாட்டுக் கழகம் | குருநகர் |
| 2) விநாயகர் | விளையாட்டுக் கழகம் | அளவெட்டி |
| 3) சென். அன்ரனிஸ் | விளையாட்டுக் கழகம் | பாஷையூர் |
| 4) ஞானமுருகன் | விளையாட்டுக் கழகம் | மயிலங்காடு |
| 5) சென். மேரிஸ் | விளையாட்டுக் கழகம் | நாவாந்துறை |
| 6) ஸ்கந்தா ஐக்கிய | விளையாட்டுக் கழகம் | சுன்னாகம் |
| 7) றோயல் | விளையாட்டுக் கழகம் | ஊரெழு |
| 8) யங்கென்றிஸ் | விளையாட்டுக் கழகம் | இளவாலை |
| 9) அம்பாள் | விளையாட்டுக் கழகம் | புங்குடுதீவு |
| 10) அரியாலை ஐக்கிய | விளையாட்டுக் கழகம் | அரியாலை |
| 11) திருமலை நட்சத்திரங்கள் | விளையாட்டுக் கழகம் | யாழ்ப்பாணம் |
| 12) பொற்பதி | விளையாட்டுக் கழகம் | கொக்குவில் |

இப்போட்டிகளுக்கான பிரவேசக் கட்டணம்
100/- 50/- 25/- (10/- பாடசாலை மாணவர்களுக்கு மட்டும்)

அனைத்து உதைபந்தாட்ட ரசிகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நன்றி.

வட பிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கமும்
தையல், தட்டச்சு பயிற்சி மாணவர் ஒன்றியமும்

(சி-7315)

---

## தேவை

அனுபவமும், திறமையுள்ள ''Bar Keeper Cum Steward'' பதவிக்கு வெற்றிடம் உண்டு. விண்ணப்பிப்பவர்கள் நேரில் காலை 10 மணிக்கும் பிற்பகல் 4-30 மணிக்கும் இடையில் கல்வி அனுபவ சான்றிதழ்களுடன் 15 – 02 – 1994, 16 – 02 – 1994 ஆகிய திகதிகளில் நேரில் வரவும். அனுபவமும், திறமை அடிப்படையில் சம்பளம் தீர்மானிக்கப்படும்.

**ஹோட்டல் ஞானம்ஸ்,**
299, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-7338]

---

ஹாட்லிக் கல்லூரி
(பழைய மாணவர் சங்கம்)

## சேவை நலம் பாராட்டு விழா

### பேராசிரியர் அ. துரைராஜா

ஹாட்லிக் கல்லூரியின் தலை சிறந்த
மாணவர்களில் ஒருவரும்,
பழைய மாணவர் சங்க
கொழும்புக் கிளையின் தலைவரும்,
கல்லூரியின் உயர்ச்சிக்கு
அயராது உழைத்துவருபவருமான,

பேராசிரியர் அ. துரைராஜா

அவர்களைக் கௌரவிக்குமுகமாக
ஒன்று கூடல் நிகழ்வொன்று
ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இடம்: **Y. M. C. A.** மண்டபம்
காலம்: **20-02-1994** மாலை 3 மணி

இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். கலந்து கொள்ள விரும்புபவர்கள் செயலாளருடன் அல்லது நிர்வாகக்குழு அங்கத்தினர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

— செயலாளர்.

(29450)

---

## 9ஆவது உதய நிறைவு நாள்



### செல்வன் ஸ்ரீரஞ்சன் பிரேமகீதன்

உதயம்: 16–02–1985 மறைவு: 01–06–1989

ஆண்டுக்கு ஒரு முறைதான் பிறப்பு என்ற
அமுதான நினைவு வரும் பெற்றவர்க்கு – இன்று
தான் உன் பிறப்பு எம் மகனே கீதன் - நீ
பிறக்காத நாளில்லை எம் நினைவில் - கணந்தோறும்
உன்னை நாம் நினைக்கின்றோம்;
கலங்கிடும் கண்ணீராய் எம்மை நாம் நனைக்கின்றோம்.

உன் இழப்பை நினைந்தருகும்;
உனது அன்பு அப்பா, அம்மா,
அன்புத் தங்கை திவ்வியா,
அருமைத் தம்பி,
மற்றும் அம்மப்பா, அம்மம்மா
பாலாமாமா, சீலன்மாமா.

75 (புதிய இல 109),
அரசடி றோட்,
யாழ்ப்பாணம்.

(29430)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### திலகராசா சசிகலா

(காரைநகர் பயிரிச்கூடல் - சண்முகவித்தியாலயம் திருகோணமலை ஆண்டு 5 மாணவி – வித்தியாலய றோட், திருகோணமலை)

மலர்வு: 11 - 05 - 1984 உதிர்வு: 17 - 01 - 1994

எங்கள் அருமைச் செல்வியும்; அன்பு அக்காவும், பேர்த்தியும், மருமகளுமாக இருந்து எம்மையெல்லாம் ஆறாத் துயரத்தில் ஆழ்த்திச் சிட்டாக மறைந்துசென்ற செல்வமே! உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தந்தை: பொன்னையா திலகராசா
(நீர் விநியோக வடி வாய்க்கால் சபை – திருகோணமலை)
தாய்: திருமதி திலகராசா கிரிஜாதேவி,
சகோதரி: செல்வி துஷ்யந்தினி,
பேரன், பேர்த்தி: ஐ. பாலசிங்கம் தவமணி,
மாமன், மாமி: பா. நந்தகுமாரன் – சிவநிதி
மற்றும் பெரியப்பாமாரும் குடும்பத்தினரும்,
சித்தப்பாவும் குடும்பத்தினரும்.

''P. M. சங்கரப்பிள்ளை வாசம்'',
சங்கரத்தை வீதி,
வட்டுக்கோட்டை.

(29458)

---

## 6ஆம் மாத நினைவஞ்சலி



மண்ணில்: 04 – 04 – 1944
விண்ணில்: 16 – 08 – 1993

### செல்வி லோகராணி கந்தையா

(வங்கி சேவை முகாமையாளர் - பதில் முகாமையாளர்)

அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டுகின்றோம்.


சகோதரன், சகோதரிகள்,
மைத்துனன், மைத்துனி,

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(29456)

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 25 – 04 – 1928
ஆண்டவன் அணைப்பில்: 16 – 02 – 1992

### அமரர் கந்தையா கனகலிங்கம்

(வேலணை வடக்கு)

[E. கைலாசபிள்ளை அன்கோ உரிமையாளரும், காவி ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசர் ஆலய பரிபாலனசபைத் தலைவரும்]

திதி: 23 - 02 - 1994

இரண்டாண்டு நினைவினிலே
இதயம் ஏங்குதைய்யா
புரண்டு நாம் அழுதாலும்
புத்துயிராய் வருவீரோ.

கனவான வாழ்வாகி
கலங்கி நாம் நிற்கையிலே
கனவினிலே கலந்து வந்து
கண்காட்டி மறைக்கலாமோ.

விதியினை நொந்து நாங்கள்
விசும்பி அழுகின்றோம்
பதியினை இழந்து நாங்கள்
பரிதவித்து நிற்கின்றோம்.

என்றும் நம்புகின்றோம்
எங்களுடன் இருப்பதாக
பின்னும் ஏன் இந்த
பிரிவு என்று புரியவில்லை.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
அன்பு மனைவி,
அருமைப் பிள்ளைகள்,
மருமகள், ஆருயிர் சகோதரர்கள்.

செருக்கப்புலம் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(29448)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## யாரை யார் நம்ப வேண்டும்?

சமாதானப் பேச்சுக்கான அமைதிச் சூழ்நிலையை உருவாக்குவதற்கு விடுதலைப் புலிகள் தரப்பில் இரண்டு யோசனைகள் — கோரிக்கைகள் — முன்வைக்கப்பட்டன. அந்த யோசனைகளை யாழ்ப்பாணம் வந்து சென்ற சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்னா ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தி இருந்தார்.

நேரத்துக்கு நேரம் பேச்சு மாறும் ஜனாதிபதி, அவை குறித்து மேற்கொண்டு செயற்படுவதற்கு முன்னர், எல்லாவற்றுக்கும் முற்றுப் புள்ளி வைக்கும் விதத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கருத்து வெளியிட்டுள்ளார்.

சமாதான யோசனை எதுவானாலும் அது விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனிடம் இருந்தே வரவேண்டும் என்றும், ஏனைய மட்டத் தலைவர்களிடம் இருந்து வருவதை ஏற்க முடியாது என்றும் பிரதமர் நிராகரித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது என்ற தகவலையும் அதற்கான அழைப்பையும் முதலில் அரச தரப்பில் வெளியிட்டவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தான். விடுதலைப் புலிகள் அந்த அழைப்புக்கு மதிப்புக் கொடுத்து உகந்த யோசனைகளைத் தெரிவித்ததும், இப்போது அவற்றை நிராகரித்து முட்டுக்கட்டை போடுவதற்கு முன்னிற்கிறார்.

இதற்கு மூலகாரணம் டி. பி. விஜேதுங்காவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் இடையேயான தலைமைத்துவப் போட்டியும் கருத்து மோதலுமாகும்.

விஜேதுங்கா இனப்பிரச்சினையே இல்லை என்று இனத்துவேசம் பேசிவந்த போது, தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கறையில்லாதவராக செயற்பட்டபோது, அவரைவிடத் தாம் வித்தியாசமானவர், வேறுபட்டவர் என்று காட்டுவதற்காக, பேச்சுவார்த்தையில் அக்கறை உடையவராகக் காண்பித்தார் ரணில்.

அதனை ஊர்ஜிதம் செய்யும் வகையிலேயே கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் தலைமையிலான நல்லெண்ணத் தூதுக்குழுவை யாழ்ப்பாணத்துக்கு (பின்னால் நின்று) அனுப்பிவைத்தார்.

இதனை அறிந்து கொண்டு ரணிலுக்குப் போட்டியாக கலாநிதி ஆரியரத்னாவை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினார் விஜேதுங்கா.

ஆகையால் ஜனாதிபதி பக்கத்து ஆளான ஆரியரத்னா கொண்டு சென்ற விடுதலைப் புலிகளின் யோசனைகளை நிராகரிக்கத் துணிந்திருக்கிறார் ரணில். தலைவர் பிரபாகரனிடமிருந்தே யோசனைகள் வரவேண்டும் என்று குதர்க்கம், விதண்டாவாதம் பேசுகிறார்.

சிங்களக் கட்சிகள் தமக்கு அரசியல் ஆதாயம் தேடுவதற்காகத் தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்துவதுபோல ரணிலும் விஜேயும் தமக்கிடையேயான போட்டிக்கும் அதனை உபயோகிக்க முனைந்துள்ளார்கள்!

இது எதனைக் காட்டுகிறது? தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் சிங்களத் தலைவர்கள் எவருமே அக்கறை கொள்ளப் போவதில்லை என்பதனையே ஆகும்! தங்கள் பிரச்சினை தீர்வதில் யார் குறியும் அரசியாகட்டும் என்ற வகையில் தமிழர்கள் நோக்கும் போது, சிங்களத் தலைவர்கள் பிரச்சினை நீராமல் தடுக்க வேண்டும் என்பதில் பல்வேறு தளங்களில் நின்று போட்டி போடுகிறார்கள்!

இங்கே தான் முக்கிய கேள்வி எழுகிறது? சிங்களத் தலைவர்களை தமிழர்கள் எப்படி நம்புவது? விடுதலைப் புலிகள் தலைவர்களை நம்ப முடியாது என்று கூறும் சிங்களத் தலைவர்களிடம் இந்தக் கேள்வியைத் திருப்பிக் கேட்க வேண்டும்! அல்லவா?

அரச அதிபரிடம் மகஜர் மூலம் கோரிக்கை:

# கூட்டுறவு சங்கங்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்குக!

## இல்லையேல் ப. நோ. கூ. சங்கங்கள் மக்களின் நன்மதிப்பை இழக்கும்

யாழ்ப்பாணம், பெப். 16

''எம்மால் காலத்துக்குக் காலம் முன் வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு காணப்படாமையால் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களின் நன்மதிப்பை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே கடந்த நான்கு வருடங்களாக எமது சங்கங்கள் எதிர்நோக்கி வரும் — தீர்த்து வைக்கப்படாத — பிரச்சினைகளை; தீர்த்து வைக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.''

யாழ் மாவட்ட ப. நோ. கூ சங்கங்களின் சார்பில் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையால் யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரிடம் கையளிக்கப்பட்டுள்ள மகஜரில் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற முக்கிய கலந்துரையாடலின் போது இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள சங்கங்களின் முக்கிய பிரச்சினைகள் வருமாறு :-

★ மண்எண்ணெய் விநியோகத்தின் மூலம் ப.நோ.கூ. சங்கங்கள் நஷ்டமடைந்துள்ளன. போக்குவரத்துக் கூலி வழங்கப்படாமை, சரியான விலை நிர்ணயம் செய்யப்படாமை, பரலில் மண்எண்ணெயின் அளவு குறைதல் போன்றவையே அதற்குக் காரணங்களாகும்.

எனவே கடந்த காலத்தில் மக்களுக்கு விநியோகிக்கப்பட்ட மண்எண்ணெயின் கொள்வனவுச் செலவுகளை ஆராய்ந்து—தகுந்த விலை நிர்ணயம் செய்து-மேலதிகமாக அறவிடப்பட்டபணத்தை சங்கங்களுக்குத் திருப்பி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

★ யாழ். மாவட்டத்துக்குத் தேவையான அரிசி, மா, சீனி, பருப்பு, பாமா போன்ற அத்தியாவசியப் பொருள்களை மூன்று மாத காலத்துக்குத் தேவையான அளவில் களஞ்சியப்படுத்தி வைக்க (Buffer Stock) நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ யாழ். செயலகத்துக்கு வந்து சேரும் பொருள்களை ஏனைய பிறமாவட்டங்களில் நடைமுறையில் உள்ள விலைகளில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ அத்தியாவசிய உணவுப் பொருள்களை ப. நோ. கூ. சங்கங்கள் மூலமாக விநியோகிக்கும் முறை பல வருடங்களாக நடைமுறையில் இருந்து வந்துள்ளது. ஆனால் தற்போது ப. நோ. கூ. சங்கங்களுக்குப் போட்டியாகவும் — சீரான உணவு விநியோகத்தில் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடிய விதத்திலும் — வர்த்தகத் திணைக்களத்துக்கு செயலகத்தால் கட்டுப்பாடும், தட்டுப்பாடும் இல்லாத முறையில் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

இது பற்றி நாம் பலதடவைகள் ஆட்சேபனை தெரிவித்து வந்துள்ளோம். ஆயினும் அதற்குரிய இறுக்கமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

★ உணவு விநியோகத்துக்குப் பொறுப்பான யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி ப. நோ. கூ. சங்கங்களுக்கு கடன் வசதி வழங்க மறுத்து விட்டது. இது ஒரு பாரதூரமான விடயமாகும். எனவே ப. நோ. கூ. சங்கங்களுக்கு அவர்களின் உச்ச எல்லைக்கு அமைவாக கடன்வசதி செய்து தர நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறோம்.

இடம் பெயர்ந்துள்ள ப. நோ. கூ. சங்கங்கள்கைவிட்டு வந்த நிவாரணப் பொருள்களை கடன் கணக்கில் இருந்து நீக்குதல் மற்றும் நிவகப.நோ. கூ. சங்கங்களின் போக்குவரத்து கூலி, மாணவர் மதிய உணவு முத்திரை, சமீபத்திய வெள்ள நிவாரணம் தொடர்பான பல பிரச்சினைகள் பற்றியும் அந்த மகஜரில் விவரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ—5)

பல்கலை. பதியாத மாணவருக்கு பதிலாக

## புதிய மாணவர் தெரிவு மேலும் தாமதமாகும்

யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு தமது பதிவுகளை மேற்கொள்ளாத மாணவர்களுக்குப் பதிலாக புதிய மாணவர்களைத் தெரிவு செய்யும் வேலைகள் தாமதமாவதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதிய மாணவர்கள் பற்றிய விவரங்களை கடந்த 31ஆம் திகதி வெளியிட பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு முயற்சி செய்ததாகவும் —

யாழ். பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழகங்களில் இருந்து பதிவு செய்யாத மாணவர்களின் விவரங்கள் கிடைக்கவில்லை என்றும் —

அதன் காரணமாக புதிய மாணவர் விவரம் தாமதமாகவே வெளியிடப்படும் என்றும் — பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த வேலைகளை பூர்த்தியாக்குவதில் உள்ள தாமதத்தால் 1992 ஆம் ஆண்டு பரீட்சை அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள் வெளியிடுவதும்தாமதமாவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-3)

## ஈராக் மீண்டும் பலம் அடைகிறது

வாஷிங்டன், பெப். 16

வளைகுடா யுத்தத்துக்கு முன்பு இருந்த படைப் பலத்தை ஈராக் பெரும்பாலும் மீண்டும் பெற்றுவிட்டதாக அமெரிக்க சஞ்சிகை ஒன்று தெரிவித்துள்ளது.

லண்டனில் உள்ள உளவுத் துறை வட்டாரங்களை மேற்கோள்காட்டி அச்சஞ்சிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

வளைகுடா யுத்தத்துக்கு முன்பு ஈராக்கிடம் 5ஆயிரத்து 500 டாங்கிகள் இருந்தன.

இப்போது ரி-72 சோவியத்ரக நவீன டாங்கிகள் 2 ஆயிரத்து 500 ஈராக்கிடம் உள்ளன. 400 போர் விமானங்கள் உள்ளன.

வளைகுடா யுத்தத்தின் போது தப்பிச் சென்று ஈரானில் வைக்கப்பட்டு இருக்கும் பல ஜெட் போர் விமானங்களை மீண்டும் தருவிக்கும் முயற்சியில் ஈராக் ஈடுபட்டுள்ளது. 200 ஆயுதத் தொழிற்சாலைகள் புதிதாக ஈராக்கில் நிறுவப்பட்டுள்ளன. (இ-எ)

## 2,000 துண்டுகளாக அரிந்து லெனின் மூளை சோதனை

### சாதாரண மனிதனின் மூளை போன்றதே!

மாஸ்கோ, பெப் 16

70 ஆண்டுகளுக்கு முன்பு லெனினின் மூளையில் நடத்தப்பட்ட உடற்கூற்று ஆராய்ச்சியின் முடிவை ரஷ்ய விஞ்ஞானிகள் அண்மையில் வெளியிட்டனர்.

''சோவியத் யூனியனின் ஸ்தாபகரான லெனினின் மூளை சாதாரணமான மனிதன் ஒருவனுக்குள்ளது போன்றே காணப்பட்டது. பரபரப்பாகக் கூறுவதற்கு அந்த மூளையில் எதுவுமே காணப்படவில்லை. சந்தேகமின்றி திறமையுள்ள ஒருவரின் மூளை போன்றே லெனினின் மூளை காணப்பட்டது'' — மாஸ்கோ மூளை ஆராய்ச்சி இன்ஸ்டிடியூட்டின் பணிப்பாளர் ஒலெக் அட்ரியானோவ் இவ்வாறு இற்றார் - டாஸ் செய்தி ஸ்தாபனத்துக்குத் தெரிவித்தார்.

லெனின் மூளை 1·34 கிலோ எடையானது. லெனினின் மூளை 2 ஆயிரம் துண்டுகளாக அரிந்து ஆராய்ச்சி செய்யப்பட்டது. இந்த ஆராய்ச்சிப் பணியில் சோவியத்தின் புரட்சிக் கவிஞர் விளாடிமிர் மயாக்கொவ்ஸ்கி, சோவியத் சினிமா தயாரிப்பாளர் செர்ஜி ஈன்ஸ்டீன், சர்வாதிகாரி ஜோசப் ஸ்டாலின் ஆகியோரும் இணைந்து செயல்பட்டனர்.

லெனினுக்குப் பின்னர் பதவிக்கு வந்த ஸ்டாலினின் மூளையிலும் விசேட அம்சங்கள் எவற்றையும் நாம் காணவில்லை — என்று மூளை ஆராய்ச்சி நிபுணர் திரு. அட்ரியனோவ் தெரிவித்தார்.

இந்த ஆராய்ச்சியின் முடிவு லெனின் மறைந்த 70 ஆண்டு நிறைவுக்கு மூன்று நாட்களுக்கு முன்பு வெளியிடப்பட்டது. லெனின் மூளையின் வலது பகுதியில் தான் விரிவான ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டது. இடது பக்கம் இரத்தப் பெருக்கால் பழுதடைந்திருந்தது.

இந்த ஆராய்ச்சி பற்றிய தகவல்கள் மாஸ்கோ மூளைஆராய்ச்சி இன்ஸ்டிடியூட்டில் இதுவரை காலமும் மிக இரகசியமாக பாதுகாக்கப்பட்டு வந்தது. (ஒ-எ)

## இலவச 'பார்மசி' வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், பெப். 16

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம் நடத்தும் இலவச 'பார்மசி' வகுப்புக்கள் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

நேர்முகப் பரீட்சையில் தெரிவானோர் மட்டும் அன்றைய தினம் பணிமனைக்கு சமுகமளிக்குமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார்.

உலக நிறுவனம் அன்பளிப்பு:

## தமிழருக்கு கிடைத்தவை சிங்களவருக்கு விநியோகம்

யாழ்ப்பாணம், பெப். 16

வடக்கு - கிழக்கு பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருப்போருக்கென வழங்கப்பட்ட 19 கோடி 20 லட்சம் பெறுமதியான உணவுப் பொருள்களை ஸ்ரீலங்கா அரசு சிங்களப் பகுதிகளுக்கு வழங்கவிருக்கிறது.

இதனை உலக உணவுத் திட்டப் பிரிவு வழங்கியிருந்தது.

இவ்வுணவுத் திட்டம் வழங்கிய உணவுப் பொருள்களை கொழும்பு, குருநாகல், அனுராதபுரம், மாத்தறை, பொலன்னறுவ, புத்தளம் ஆகிய இடங்களில் உள்ள சிங்கள மக்களுக்கு வழங்க ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டுள்ளது.

இப்பகுதிகளில் 160 முகாம்களில் தங்கியுள்ள 54 ஆயிரம் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவிருப்பதாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்துள்ளது. (ஒ-3)

# தமிழீழ மக்கள் மண்ணை ஏன் தின்ன வேண்டும்?

# போதியளவு பொருண்மிய வளம் எம்மிடமுண்டு

ஸ்ரீலங்காவில் தமிழீழம் பொருண்மிய வள வாய்ப்புக்களைக் கொண்டிருக்கின்றது;

அதன் நுகர்தலைப் பொறுத்தவரை பெருமளவில் முன்னேற்ற நிலை காணப்படுகின்றது. இதை எவரும் மறுக்க முடியாது. செழிப்பான மண் வளத்தைக் கொண்டிருக்கும் தமிழீழப் பிரதேசத்தில், ஸ்ரீலங்காவின் நிலப்பரப்பில் செழிப்பான மண்வளத்தைக் கொண்ட 28.0 சதவீதத்திற்கு மேற்பட்ட நிலப்பரப்பு உள்ளது. வரலாற்றுக் காலத்தில் உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளில் தமிழீழம் தன்னிறைவைக் கொண்டிருந்தது. அது மட்டுமல்ல, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியும்செய்தது. இதற்கான சான்றுகள் காணப்படுகின்றன.

இன்றைய சூழ்நிலையில் ஸ்ரீலங்கா அரசின் அடாவடித்தனமான பொருண்மியத் தடை, எரிபொருள்தடை, கடலில் மீன்பிடிப்பதற்குத் தடை, பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த பிரதேசங்களில் இருந்து இராணுவத்தின் உதவியுடன் அகதிகளாக்கப்பட்டு வருகின்ற நிலை போன்ற பல அசாதாரணக் காரணிகளின் விளைவாக தமிழீழத்தின் உச்ச உற்பத்தி அளவை பெற்றுக்கொள்ள முடியாதுவிடினும் தமிழீழ உற்பத்திகள் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன.

> ஸ்ரீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெற்கிலுள்ள தமிழர்கள் வடக்கிற்குச் சென்றால் மண்ணைத் தான் தின்ன வேண்டும் என்று கூறியதற்குப் பதிலளிக்கும் வகையில் அமைந்த தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் புள்ளி விவரங்களுடன் கூடிய தகவல்களை இங்கே தருகின்றோம்.

பொதுவாக தமிழீழத்தில் உணவுப் பயிர்ச்செய்கை, உப உணவுப் பயிர்ச்செய்கையான சிறுதானியவகை, கிழங்கு வகை, பருப்புவகை, மரக்கறி வகை, பழவகை போன்றனவும், கால்நடைவளம், கடல் வளம் போன்றனவும் ஸ்ரீலங்காவோடு ஒப்பிடும் போது தற்சார்பு ரீதியாக அதிகரித்தே காணப்படுகின்றன.

குறிப்பாக நெல் உற்பத்தியினை பின்வரும் அட்டவணை துலக்கமாகத் தெரிவிக்கின்றது.

### தமிழீழத்தில் நெல் உற்பத்தி 1990 (மெற்றிக் தொன்)

| | வடதமிழீழம் | தென்தமிழீழம் | தமிழீழம் |
|---|---|---|---|
| நெல் உற்பத்தி | 1,27,000 | 4,82,000 | 60,9000 |
| தேவையான நெல் | 1,94,610 | 1,79,640 | 3,74,250 |
| மிகை உற்பத்தி | — | 3,02,360 | — |
| மேலதிக தேவை | 6,76,10 | — | — |
| மிகை உற்பத்தி (தமிழீழம்) | — | — | 2,34,750 |

அதாவது தமிழீழப் பிரதேசத்தில் மொத்த நெல் உற்பத்தி 6 லட்சத்து 9 ஆயிரம் மெற்றிக் தொன்னாகும். நெற்களஞ்சியம் என வர்ணிக்கப்படும் தென்தமிழீழத்தில் மக்கள் அனுபவிக்கும் பல்வேறு அநர்த்தங்களின் மத்தியிலும் நெல் தேவை நிறைவு செய்யப்படுகிறது. மிகையாக உள்ள நெல் உற்பத்தி ஸ்ரீலங்கா அரசிற்கே ஏற்றுமதி செய்யப்படுகிறது.

வடதமிழீழத்தில் பெருமளவில் நெல் உற்பத்தி நிலங்கள் உற்பத்திக்குட் படுத்தப்படாத நிலையில் கூட 1 லட்சத்து 27 ஆயிரம் மெற்றிக் தொன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இப் பிரதேச மக்களுக்கு மேலதிகமாக 67 ஆயிரத்து 610 மெற்றிக் தொன் தேவைப்படுகின்றது. எனினும் தமிழீழத்தின் உற்பத்தியினைப் பெற்றுக் கொள்வோமாயினும் கூட 2 லட்சத்து 34 ஆயிரத்து 750 மெற்றிக் தொன் நெல்லானது மிகையாக உண்டு. இதனை ஏற்றுமதி செய்து பெருமளவில் அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு எமக்குண்டு.

வடதமிழீழத்தில் நெற்செய்கைக்கு உட்படுத்தக் கூடிய நிலப்பரப்பாக 99 ஆயிரத்து 55 ஹெக்ரேயர் காணப்படுகின்றது. மேற்படி நிலப்பரப்பினை பூரணமாக உற்பத்தியிலீடுபடுத்துவோமாயின் சராசரி ஒரு ஹெக்ரேயருக்கு 3.5 மெற்றிக் தொன் நெல்லினைப் பெற்றுக் கொள்வதுடன் மொத்தமாக 2 லட்சத்து 47 ஆயிரத்து 637 மெற்றிக் தொன்னை உற்பத்தி செய்ய முடியும். அவ்வாறாயினும்கூட வட தமிழீழ மக்களின் தேவையினை விட 53 ஆயிரத்து 27 மெற்றிக் தொன் மிகையாகக் காணப்படுவதுடன் தென் தமிழீழத்தில் மிகையான உற்பத்தியை மேற்கொள்ளின் தற்போதைய உற்பத்தியிலும் பார்க்க பெருமளவிற்கு உற்பத்தியை காணலாம்.

இது காரணமாக தமிழீழ மக்களின் உணவின் முக்கிய கூறான நெல்லின் மிகை உற்பத்தி 3லட்சத்து 55ஆயிரத்து 387 மெற்றிக் தொன்னாக அதிகரிப்பதுடன் பெருமளவு அந்நியச் செலாவணியையும் பெற்றுக் கொள்ள முடியும். இதனை வென்றெடுப்பதற்கு உற்பத்தியில் ஈடுபடக் கூடிய நிலங்களைப் பயன்பாட்டுக்கு கொண்டு வரவும், விவசாயிகளின் தேவைகளை நிறைவேற்றவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றது.

### உப உணவுச் செய்கை

உப உணவுப் பயிர்ச் செய்கை உற்பத்திகளான வெங்காயம், மிளகாய் மற்றும் உற்பத்திகளைப் பொறுத்தவரை தமிழீழம் 1970 களில் அதன் நுகர்வுக்கு மேலாக ஸ்ரீலங்காவின் தேவையினைக்கூட பூர்த்தி செய்து வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா அரசினால் போக்குவரத்துத்தடை உட்பட பல்வேறு தடைகளின் விளைவாகவும் தாராள இறக்குமதிக் கொள்கையின் விளைவாகவும் மிகை உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய முடியாதுள்ள போதிலும் எதிர்காலத்தில் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படுமாயின் தன்னிறைவுக்கப்பால் வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியும் என நம்பலாம்.

ஸ்ரீலங்காவின் கடற்பரப்பில் 60 சதவீதத்திற்கு மேற்பட்ட கடற்பரப்பு தமிழீழத்திற்கு சொந்தமானதாகக் காணப்படுவதுடன் மீன்பிடித்தலுக்கான வள வாய்ப்புகளும் இப் பிரதேசங்களிலேயே காணப்படுகின்றன. தமிழீழப் பிரதேசத்திலேயே வோஜ் பேதுரு ஆகிய இரு கண்டமேடைகளும் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

### மீன்வளம்

ஸ்ரீலங்கா அரசின் பல்வேறு தடைகளுடன் கடல் வலயத் தடையை விதித்தபோதிலும் 1990 ஆம் ஆண்டில் தமிழீழ மீன் உற்பத்தி 51ஆயிரத்து 996 மெற்றிக் தொன்னாக இருந்தது. இது 1983ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 4320 மெற்றிக் தொன்னாகவிருந்ததுஎன்பது குறிப்பிடத்தக்கது. 1990ஆம் ஆண்டில் மக்களின் நுகர்வு 40 ஆயிரம் மெற்றிக் தொன்னாகவிருந்தது. அதாவது 1990இல் மிகை உற்பத்தியாக 11 ஆயிரத்து 996 மெற்றிக் தொன் கொழும்புச் சந்தைக்கே எடுத்துச் செல்லப்பட்டது என்பதை இங்கு கவனத்திற்கெடுத்துக் கொள்ளல் வேண்டும்.

தற்போதைய நிலையில் தமிழீழ மீன் உணவுப் பொருள்கள் மிகக் குறைவாக அனுப்பப்படுவதால் அங்கு கேழ் இறைச்சியின் விலையோடு ஒப்பிடும்போது மீனின் விலை அதிகமாகவிருக்கின்றது என சந்தை நிலைவரங்களைஆதாரம் காட்டி தெரிவிக்கப்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டு தமிழீழப் பிரதேசத்தின் மீன் உற்பத்தியானது 1990 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 50.0 சதவீதமே ஆகும். கடற் [illegible] யாளரின் அச்சுறுத்தல் தவிர்க்கப்பட்டு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதுடன் மீனவத் தொழிலாளருக்கு தொழில்புரிய உதவிகள் வழங்கப்படும் பட்சத்தில் தமிழீழத்தின் வருமானத்தில் பெரும் [illegible] மீன்பிடித் தொழிலிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். ஒட்டு மொத்தத்தில் தமிழீழத்தின் வளங்கள ஸ்ரீலங்காவிற்கே உணவளிக்கின்றன. ★

> விடுதலைப்புலிகள் ஈழம் கோருகின்றனர் என்று கூறி அவர்களுக்கு ஈழம் கிடைக்காது. வடக்கு - கிழக்குக்கு ஈழம் தரப்படும் எனக் கூறி தெற்கிலுள்ள தமிழர்களை அங்கு செல்லுமாறு நாம் கோரினால் என்ன நடக்கும். உண்பதற்கு அவர்களிடம் என்ன இருக்கிறது. மண்ணை மட்டும் தான் அவர்கள் தின்ன வேண்டும். அங்கு வருமானம் தரும் வளங்கள் என்ன? வடக்கு வளம் கொண்ட பூமி அல்ல. சகல பொருள்களையும் தெற்கிலிருந்தே அனுப்ப வேண்டியுள்ளது. ஒரு நாளைக்கு உணவுப் பொருள்கள் அங்கு அனுப்பப்படாவிட்டால் அங்குள்ளவர்கள் பட்டினியால் வாட வேண்டி ஏற்படும்.
>
> - ஸ்ரீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா -

**அந்நிய உணவை மறப்போம் - நம் மண்ணிலே பயிரை வளர்ப்போம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய தேசியக் கட்சி தங்குமடம் போன்றது

## எவரும் வந்து போகலாமாம்

ஐக்கிய தேசியக்கட்சி ஒரு 'தங்குமடம்' போன்றது. எவரும் வந்து தங்கி எப்போது வேண்டுமானாலும் வெளியேறலாம்.

வத்தளையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசியபோது ஜனாதிபதி விஜேதுங்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

கட்சியில் வந்து சேருபவர்களை எந்தச் சட்டமும் கட்டுப்படுத்தாது. உறுப்பினர்களிடையே வேற்றுமை இல்லை. எல்லோரும் மகிழ்ச்சியாக உள்ளனர் என்றும் ஜனாதிபதி கூறினார். (இ-எ)


**எடிசன் அக்கடமி**

(யாழ். இந்துக் கல்லூரி அருகில்)
41/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

**SPOKEN ENGLISH BY BRITTO**

ஆரம்பம்: 17-02-94 பி. ப. 4 மணி.
(வியாழன் – வெள்ளி 4 மணி)
(கி/7347)



சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான

**குரக்கன் மா**

கிலோ ரூ. 32/-

நியாய விலையில் தரமான பொருள்களை பெற்றுக்கொள்ள

**வர்த்தகத் திணைக்களம் கிளைகள்**

★ யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி.
★ அரியாலை, ச. ச. நி. கட்டடம்,
★ சுன்னாகம். சந்தைக்கு முன்பாக.
★ கோப்பாய், வைத்தியசாலை முன்பாக.
★ கண்டிக்குளி, கண்டி வீதி.
★ சாவகச்சேரி, கச்சாய் வீதி,
★ மானிப்பாய், வைத்தியசாலைக்கு அருகில்.
★ பருத்தித்துறை, கிராமக் கோட்டு சந்தி.

மொத்தமாகப் பெற விரும்பின்,
மொத்த விற்பனைப் பிரிவு
**அரஸ்கோ கட்டடம்**
அரியாலை
[29460]


## மரண அறிவித்தல்கள்

### வெற்றிவேலு ஆறுமுகம்

காரைநகர் களபூமி விடுப்போடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது சுழிபுரம் மத்தி, சுழிபுரத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான வெற்றிவேலு ஆறுமுகம் 12 - 2 - 94 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புக் கணவரும் சுந்தரலிங்கம் (முகாமையாளர் – V. M. P. அன் சன்ஸ், கொழும்பு - 12), பரமேஸ்வரி, கனகலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரி, கனகசுந்தரம், இராசபூபதி ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌரிசங்கர், சுதாறணி ஆகியோரின் அன்புப் பேரனாரும் காலஞ்சென்ற வெ. கந்தையா (முன்னாள் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலை — அதிபர்) காலஞ்சென்ற இலட்சுமி, பொன்னம்மா, ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தெய்வானை கந்தையா, காலஞ்சென்ற தில்லையம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16 - 2 - 94) காலை 10 மணியளவில் திருவடிநிலை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
(6973)

### திருமதி நாகரத்தினம் சின்னத்துரை

தன்னாலையைச் சேர்ந்த திருமதி நாகரத்தினம் சின்னத்துரை [இளைப்பாறிய ஆசிரியை, வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை] 15-02 94 இல் சங்கத்தானை, சாவகச்சேரியில் காலமானார்.

அன்னார் உடுப்பிட்டியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு. ஆறுமுகம் சின்னத்துரையின் அன்பு மனைவியும், கலாநிதி விஜயகுமார் [கனடா], இரவிகுமார் [பொறியியலாளர்] Dr மித்திரகுமார் [கொழும்பு] திருமதி சுகுணுஷா திருமதி வி தயாவதி [ஆஸ்திரேலியா], செல்வி அனுராகா [ஆசிரியை, விவேகானந்த வித்திய சாலை, கொழும்பு] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு இ கலாதேவன் [இளைப்பாறிய எழுதுவினைஞர்] திரு.மா விஜெயகுலேந்திரன் [ஆஸ்திரேலியா] திருமதி வி வத்சலா [கனடா], திருமதி இ சுவர்ணா Dr மி.மீனாமாரி [கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமியாரும், மைத்திரேயி, மித்திராயினி, நிரேன், மயூரி, பிரியங்கன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வெரியபாவடி, சங்கத்தானை, சாவகச்சேரியிலுள்ள இல்லத்தில் இன்று 16–02–94 புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
இ கலாதேவன்
சாவகச்சேரி. [29466]

---

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தில் தீர்மானம்:

# இந்தியாவுக்கு எதிராக பாக். ஸ்ரீலங்கா உதவியை கேட்கிறது

இஸ்லாமாபாத், பெப். 16

தற்போது ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் இந்தியாவுக்கு எதிராகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றும் முயற்சியில் இலங்கையின் ஆதரவைப் பெறுவதற்கு பாகிஸ்தான் முயற்சித்து வருகிறது.

இதற்காக பாகிஸ்தான் அரசு தனது சிறப்புப் பிரதிநிதி ஒருவரை கொழும்புக்கு அனுப்பியிருப்பதாக பாகிஸ்தான் வெளியுறவு வட்டாரங்கள் தெரிவித்தன.

காஷ்மீர் தொடர்பான விடயங்களில் இந்திய அரசுப் படைகள் பல்வேறு மனித உரிமை மீறல் சம்பவங்களில் ஈடுபட்டு வருவதைக் கண்டிக்கும் விதத்தில் தீர்மானம் ஒன்றை ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்ற பாகிஸ்தான் முழு முயற்சி எடுத்து வருகிறது.

இந்த ஆணைக்குழுவின் கூட்டத்தின் ஆரம்ப வைபவங்களில் கலந்து கொண்டு உரையாற்றிய பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ, காஷ்மீரில் இந்தியப் படைகள் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் குறித்து தமது உரையில் கடும் கண்டனம் தெரிவித்தது தெரிந்ததே.

இதேவேளை—

—பஞ்சாபில் சீக்கியப் பிரிவினைவாதப் போரை அடக்க — 1989 இல் — முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு உதவியதாக பெனாஸிர் பூட்டோ ஒப்புக்கொண்டிருப்பதை அடுத்து ராஜதுரோகக் குற்றத்துக்காக அவர் பதவியை ராஜினாமா செய்யவேண்டும் என்று பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவர் நவாப் ஷெரீப் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-த)

# ப.நோ.கூ. சங்கங்களுக்குகடனுக்கு யாழ்.செயலகத்திலிருந்துபொருள்

## கலந்துரையாடலில் முடிவு

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, அவற்றின் உச்ச விற்பனை எல்லையைப் பொறுத்து, பிரதேச செயலர்களின் சிபார்சுக்கு இணங்க, செயலகப் புனர்வாழ்வுப் பகுதிப்பொருள்களைக் கடனாக வழங்கும்.

யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற முக்கிய கலந்துரையாடலில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பிரதேச செயலர்கள், அரச அதிபர், திட்டப் பணிப்பாளர், மேலதிக அரச அதிபர் ஆகியோர் நேற்றைய கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

★ கப்பல் மூலம் தருவிக்கப்படும் பொருள்களை சங்கங்களுக்கு பாகுபாடு அற்ற முறையில் வழங்குதல்.

★ மாணவர் உணவு முத்திரைக்கு பொருள்களை விநியோகித்ததன் பேரில் செயலக சமூக சேவைப் பகுதியால் சங்கங்களுக்கு வருமதியான கடனை, சங்கங்கள் புனர்வாழ்வுப் பகுதிக்கு கொடுக்க வேண்டிய கடனில் இருந்து கழித்துக் கொள்வது.

★ சென்ற வருடம் செப்டெம்பர் மாதத்தில் இருந்து பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகித்த மண்ணெண்ணெய்க்கு, ஒரு லீற்றருக்கு 2 ரூபா என்ற விகிதப்படி சேவைப்பணம் வழங்குதல்.

★ பருத்தித்துறையில் இருந்து சங்கங்கள் மண்ணெண்ணெய் ஏற்றிவரும் போக்குவரத்துக் கூலியை வழங்குவது.

★ ஒரு "பரலில்" உள்ள மண்ணெண்ணெயின் சராசரி அளவு 205 லீற்றர் எனக் கணக்கிடுவது.

நேற்றைய கலந்துரையாடலில் வர்த்தகத் திணைக்களத்தின் செயற்பாடுகள் ஒழுங்கான முறையில் இல்லாதிருப்பதாக பல நோக்கு கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகள் பலரும் அதிருப்தி தெரிவித்தனர். (அ-162)

# உயர் அதிகாரிகள் பெயரில் 'றபர் ஸ்டாம்ப்' செய்து மோசடி

## இந்து மதகுரு உட்பட 4பேர் கைது

கொழும்பு, பெப். 16

இலங்கை அரசின் உயர்நிலை அரச அதிகாரிகளின் முத்திரைகளையும் (றபர் ஸ்டாம்ப்) பொலிஸ் தலைமை அலுவலகம் உட்பட கிராம சேவையாளர் வரையான முத்திரைகளையும் போலியாகத் தயாரித்து வந்த மோசடி ஒன்றை முகத்துவாரம் பொலீஸார் கண்டுபிடித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக மருதானையிலும், ஐம்பெட்டா வீதியில — முகத்துவாரம் பொலீஸ் நிலையத்துக்கு முன்பாக — இம் மோசடிக் குழு இயங்கி வந்ததாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக இந்து மதகுரு ஒருவர் உட்பட நான்குபேரை பொலீஸார் சந்தேகத்தின் மீது கைது செய்தனர். மேலும் சிலர் கைது செய்யப்படவிருப்பதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். (உ-எ-3 6)

சூரியகந்த புதைகுழி விவகாரம்:

# சி.ஐ.டியினரின் விசாரணைக்கு நீதிவான் நேற்று உத்தரவு

கொழும்பு, பெப். 16

சூரியகந்த புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் குறித்து தொடர்ந்து விசாரணை நடத்துமாறும்—

சந்தேக நபர்கள் இருப்பின் அவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தின் முன்னால் ஆஜர் செய்யும்படியும்—

இரகசியப் பொலீஸாருக்கு இரத்தினபுரி நீதிவான் உத்தரவிட்டிருக்கிறார்.

மேற்படி சம்பவம் குறித்து விசாரித்து வந்த இரத்தினபுரி நீதிவான் நேற்று இத்தீர்ப்பை வழங்கினார்.

நீதிமன்ற விசாரணை நேற்றுடன் முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து இரகசியப் பொலீஸார் நடத்தும் விசாரணைகள் சம்பந்தமான அறிக்கையை ஏப்ரல் 18 ஆம் திகதி மன்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படியும் நீதிவான் பணித்தார்.

சூரியகந்தவில் புதைகுழியிலிருந்து எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளமை தொடர்பாக முக்கிய அரசியல்வாதி ஒருவர் பற்றமடைந்திருப்பதாக பி. பி. ஸியின் சிங்கள சேவையில் கூறிப்பிடப்பட்டது இந்த அரசியல்வாதி வடமேல் மாகாண அரசுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர் எனக் கூறப்படுகிறது.

இந்த அரசியல்வாதி முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவருடன் சேர்ந்து—

காணாமற்போனோரின் உறவினர்களின் சங்கம் ஒன்றை புதிதாக அமைக்க முயற்சித்து வருகிறாராம்.

ஏற்கனவே இது தொடர்பான — வலுமிக்க — சங்கம் ஒன்று அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகையில்—

புதிதாக மற்றொரு சங்கத்தை அமைக்க முற்படுவது, மேற்படி விடயங்கள் தொடர்பாக குழப்ப நிலையை உருவாக்குவதற்கே என்றும் விமர்சனம் செய்யப்பட்டது. (உ-6)

## தோட்ட ஆஸ்பத்திரிகள் அமைச்சு பொறுப்பில்

மலையகத்தில் உள்ள தோட்ட ஆஸ்பத்திரிகள் அனைத்தையும் சுகாதார அமைச்சு பொறுப்பு ஏற்று நிர்வகிக்க இருக்கிறது.

தற்போது இயங்கி வரும் 50 தோட்ட ஆஸ்பத்திரிகளில் பத்து ஏப்ரலில் மாதத்தில் பொறுப்பேற்கப்படும் என்றும்—

மற்றவை படிப்படியாக பொறுப்பேற்கப்படும் என்றும்— சுகாதார அமைச்சுச் செயலாளர் டாக்டர் ஜோ. பெர்னாண்டோ தெரிவித்தார்.

தோட்டப் பகுதிகளில் 50 ஆஸ்பத்திரிகளும் 200 பிரசவ விடுதிகளும் உள்ளன. இவற்றை இதுவரை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும் அரச தோட்டக் கூட்டுத்தாபனமும் நிர்வகித்து வந்தன. (இ-எ)

இப்பத்திரிகை ... உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் ... அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயமடைந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், பெப். 16

கைதடியில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற மினிபஸ் விபத்தில் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் நேற்று அங்கு மரணமானார்.

காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்து தொல்புரம் மத்தியில் வசித்து வந்த ஆசை நடராசா [44 வயது] என்பவரே மரணமானவராவார். (உ-3-15)

---

ஒரு புறம் சமாதான முயற்சி; மறு புறம் யுத்த முஸ்தீபு!

## கொழும்புப் பத்திரிகை தகவல்

இனப்பிரச்சனைக்கு சமாதானப் பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கான முயற்சி ஒரு புறத்தில் நடக்க மறுபுறத்தில் படைகளுக்குக் கூடுதலான நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் படை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பு பத்திரிகை ஒன்று மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நேரடிப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகளையும் அரசையும் ஈடுபட வைக்கும் முயற்சியில் மதகுருமார் ஒரு புறம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதேநேரம் படை அதிகாரிகள் பெரும் தாக்குதல் ஒன்றுக்கான முஸ்தீபு நடவடிக்கையாக போர்த் தளபாடங்களையும், பீரங்கி வண்டிகளையும், விமானங்களையும் கொள்வனவு செய்வதில் நாட்டம் கொண்டுள்ளனர் — என்றும் அப்பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது. [உ-3]

கிழக்கில் மக்களைக் கூட்டி

# தேர்தலில் வாக்களிக்குமாறு படையினர் வற்புறுத்து

மட்டக்களப்பு, பெப். 16

மட்டக்களப்பு - புதுக்குடியிருப்பு விசேட அதிரடிப் படை முகாமைச் சேர்ந்த படையினர் கிரான்குளம் என்ற கிராமத்தைச் சேர்ந்த மக்களை உள்ளூராட்சித் தேர்தலில் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளனர்.

இக் கிராமத்தைச் சேர்ந்த மக்களை ஒலிபெருக்கி மூலம் சரஸ்வதி வித்தியாலயத்தில் ஒன்றுகூடுமாறு படையினர் அறிவித்தனர்.

பின்னர் அம்முகாம் அதிகாரி 'டொனி' என்பவரால் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

அக் கூட்டத்தில் உரையாற்றிய இவ் விசேட அதிரடிப் படை அதிகாரி தேர்தலில் மக்கள் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்றும் — இல்லாவிடின் தான் அவர்களைப் பின்னர் கவனித்துக் கொள்வதாகவும்—எச்சரித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (த)

## ஜி.சீ.ஈ.(சா.த.) பரீட்சை முடிவுகள் மார்ச் இறுதியில்

கொழும்பு, பெப். 16

கடந்த டிசம்பரில் நடைபெற்ற ஜி. சீ. ஈ. (சாதாரணதரப்) பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த மாத இறுதியில் வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

முதலாம் தவணை விடுமுறை விடுவதற்கு முன்னர் இப்பெறுபேறுகளை வெளியிட முடியும் என்று பரீட்சை ஆணையாளர் ஆதர் வெத முல்ல தெரிவித்தார்.

இப்பரீட்சையின் செய்முறைத் தேர்வுகள் அடுத்த வாரம் ஆரம்பமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (உ-எ 6)

## செப்ரிசீமியா வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம், பெப். 16

செப்ரிசீமியா நோயின் தாக்கத்திற்குள்ளாகி நேற்றும் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தையா நடராசா (வயது 67 என்ற வயோதிபரே மரணமானவராவார். (உ-3-15)

## விளையாட்டு நிகழ்வு

எஸ். எம். பெர்னாண்டோ நிறுவனத்தின் ஆதரவில் யாழ் றோட்டரக்ட் கழகம் நடத்தும் உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகளில் டெனிஸ் ஆட்டங்கள் இன்றும், நாளையும் நாளை மறுதினமும் பிற்பகல் 2 30 மணி முதல் 6மணி வரை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறும். (த)

---

இலங்கையில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றும் வரும் சிவில் யுத்தத்தின் பாரதூரம் சர்வதேச ரீதியில் மறக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரச்சினை சர்வதேச ரீதியில் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் உலகின் ஏனைய பகுதிகளில் இடம் பெற்று வரும் மோதல்கள் குறித்து உலகத் தலைவர்களும் பொதுசனத் தொடர்புசாதனங்களும் உயர் முன்னுரிமை வழங்கி வருவதே யாகும்.

இந்த மோதலில் நேரடியாகப் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கையைப் பொறுத்த வரையில் இன்று உலகிலுள்ள மிகவும் பாரதூரமான யுத்தங்களில் இலங்கை பிரச்சினையும் ஒன்றாகக் கணிக்கப்படுகிறது.

ஆனால் —

பொஸ்னியா யுத்தத்துக்கு வழங்கப்படும் இராஜதந்திர கவனம் இலங்கைப் பிரச்சினைக்கு கொடுக்கப்படவில்லை.

இலங்கையுடன் முக்கிய பிராந்திய மற்றும் கொமன்வெல்த் தொடர்புகளை ஆஸ்திரேலியா வைத்துள்ளது. ஆகவே இந்த யுத்தத்தில் சம்பந்தப்பட்டுள்ள இரு தரப்பினர் மீதும் பலமான அழுத்தம் கொடுக்க வேண்டிய நேரம் ஆஸ்திரேலியாவுக்கு வந்துவிட்டது.

கம்போடியாவில் சமாதானத்தைக்கொண்டு வரத் தாம் பாவித்த திறமையை ஆஸ்திரேலியா வெளியுறவு அமைச்சர் இலங்கை விஷயத்திலும் பிரயோகிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் கண்மூடித்தனமானவிமானக்குண்டுத் தாக்குதல்களை இலங்கைப் படையினர் நடத்துவது பெரும் கவலையைத்தருகிறது.

விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களின் போது பாதுகாப்பானவை என்று கருதப்பட்ட இரண்டு தேவாலயங்கள் விமானத் தாக்குதலுக்கு இலக்காகின. இராணுவ, மற்றும் போராளிகளுடன் தொடர்பில்லாத குழந்தைகள், ஆண்கள், பெண்கள் இதனால் பலியாகியுள்ளனர்.

யுத்தத்தால் தளர்ச்சி அடைந்துள்ள இலங்கை மக்களுக்கு ஆதரவு அளிக்க அயல் நாடுகளுக்கு ஊக்குவிப்பு அளிப்பதன் மூலம் ஆஸ்திரேலியா தனது உறுதியை வெளிப்படுத்த முடியும்.

— இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ-3)

---

வெள்ளப்பிரச்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ள உதவிகளை வழங்க உலக திருச்சபைகள் கவுன்ஸில் தயாராக உள்ளது.

தசாப்த காலமாக இடம் பெற்ற இந்த மோதலில் பதிலுக்கு பதில் நடத்தப்படும் தாக்குதல்கள் தான் இடம் பெற்று வருகின்றன. இதில் சிவிலியன்கள் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும் யாழ்ப்பாணத்தில் இலங்கை விமானப்படை குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்துகின்றது. இது இன்னும் உயிரிழப்புகளை ஏற்படுத்துகின்றது.

சுழன்று சுழன்று இடம் பெறும் வன்செயலை நிறுத்தி, இராணுவ பலத்தில் தங்கியிருக்காத தீர்வு ஒன்றைக்காண நீங்கள் முன்வர வேண்டும்.

— இவ்வாறு ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் உலக திருச்சபைகள் கவுன்ஸில் தெரிவித்துள்ளது. (உ-எ)

---

நாச்சிக்குடா..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. ஆனால் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை மேல் விவரம் கிடைக்கவில்லை.

காயமடைந்தவர்களில் நேற்று நள்ளிரவு வரை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோர் விவரம் வருமாறு:

★ ஜோன்மேரி ஜெராட் (9 வயது –மாதகல்)

★ செபஸ்தியாம்பிள்ளை மேரி அந்தோனியம்மா (36 வயது—சேந்தாங்குளம்)

★ இவரின் மகன் டொறின் (14 வயது - சேந்தாங்குளம்)

★ சுப்பிரமணியம் தர்சினி (5 வயது – மாதகல்)

★ சந்தியாப்பிள்ளை அனுஷ்டிகா (16 வயது- மாதகல்) [உ-15]

---

நரோம..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயணிகள் அங்கு வைத்தும் இராணுவத்தினரால் கடும் சோதனைக் குள்ளாக்கப்பட்டதாகவும் —

நேற்று வந்து சேர்ந்த பயணிகள் தெரிவித்தனர்.

இக் கப்பலில் வந்த 75 பயணிகள் நேற்றுக்காலை காங்கேசன்துறையில் இருந்து 'மாஹோ' கப்பலில் பருத்தித்துறைக்கு அழைத்து வரப்பட்டனர்.

'நரோமா' கப்பலில் திருமலை செல்வதற்காக பருத்தித்துறையில் காத்து நின்ற பயணிகளை 'மாஹோ' கப்பல், பருத்தித்துறையிலிருந்து பின்னர் காங்கேசன்துறைக்கு கூட்டிச் சென்றது. (உ-3)

---

இராணுவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலவீனப்படுத்தியுள்ளது.

ஆனால் ஸ்ரீலங்காவின் இராணுவ புலனாய்வுப் பிரிவோ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடித்து அவர்களை பலவீனப்படுத்த வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளது—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-த)